Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (22.05.2012) பக்கங்கள் 20 ஓசை - 234




















# தமிழகத்தின் ஆக்ரோஷ அரசியல் ஈழத்தமிழரின் நலன் சார்ந்ததல்ல

## கூறுகிறார் ஞானதேசிகன்



(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களின் ஆக்ரோஷமான நிலைப்பாடானது இலங்கைத் தமிழர்கள் மீதான எந்தவித நலன்களின் அடிப்படையானதாக இருக்கமுடியாதென தமிழ்நாட்டு காங்கிரஸ் குழுவின் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது கட்சி தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை இருப்பினும் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டுமென்று எமது கட்சி ஆணித்தரமாக நம்புகிறது.

பிறிதொரு நாட்டின் உள்ளக விவகாரங்களில் எங்களால் தலையிட முடியாது. ஆனால் கடந்த 20 வருடங்களாக இலங்கை இராணுவத்தினராலும் விடுதலைப் புலிகளினாலும் துன்பத்தை அனுபவித்த இலங்கைத் தமிழர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு இந்தியா கடமைப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது வீடுகளுக்கு செல்வதற்கான முன்னுரிமையளித்து பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த வேண்டும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாணவனை காணவில்லை

(நெல்லியடி)

கெருடாவில் பிரதேசத்தில் தனியார் வகுப்பிற்குச் சென்ற 15 வயது மாணவனை கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை என பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தொண்டைமானாறு கெருடாவிலைச் சேர்ந்த யோகேஸ்வரக் குருக்கள் செந்தூரன் (வயது-15) என்ற மாணவனே காணாமற் போனவராவார்.

கடந்த சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு கேம்பிரிஜ் தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்வதாக வீட்டிலிருந்து புறப்பட்ட குறித்த மாணவன் நீண்ட நேரமாகியும் திரும்பிவராத காரணத்தால் பெற்றோர் தனியார் கல்வி நிலையத்திற்குச், சென்று கேட்டபோது அம் மாணவன் கல்வி நிலையத்திற்கு வர

(19) ஆம் பக்கம் பார்க்க

## புண்ணுக்கு பாவிக்கும் மருந்தை அருந்திய குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

புண்ணுக்குப் பாவிக்கும் மருந்தை அருந்திய மூன்று வயதுக் குழந்தை ஒன்று சிகிச்சை பயனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

கெருடாவில் தெற்கு தொண்டைமானாறைச் சேர்ந்த கஜசேகரம் றொசான் (வயது-03) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் குறித்த வீட்டில் உயரத்தில் போத்தலில் இருந்த புண்ணுக்குப் பாவிக்கும் மருந்தை எடுத்து அருந்தியதாகவும் இதன் பின்னர் ஆபத்தான நிலையில் குழந்தை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைததியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சை பயனின்றி மரணமாகியதாக தெரியவருகின்றது. (பா)

## 10 வருடம் சிறை இருந்தாலும் தைரியம் சிதறியிருக்காது

### விடுதலையான பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கள் நிமித்தம் சிறைசென்ற என்னை, இன்னும் 10 வருடங்கள் தடுத்து வைத்திருந்தாலும் என்னுடைய தைரியம் ஒருபோதும் சிதறியிருக்க மாட்டாது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார். சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற அவர் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க



## கைவிடப்பட்ட சிசு பாஷையூரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பாஷையூர் பற்றிமாதா தேவாலயத்திற்கு அருகிலுள்ள வெற்றுக்காணியிலிருந்து பிறந்து ஒரு நாளேயான சிசுவொன்று கைவிடப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் உயிருடன் மீட்கப்பட்டதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலையடுத்து, இச்சிசு மீட்கப்பட்டதாகவும் அக்காணியின் புற்தரையில் இச்சிசு இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட் தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட இச்சிசு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சிசுவை விட்டுச் சென்ற தாய் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைத் தேடிக்கண்டு பிடிப்பதற்கான விசாரணையை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## குஞ்சர் கடையில் கோரவிபத்து; கிராம அலுவலர் ஸ்தலத்தில் பலி

(பருத்தித்துறை)

யாழ். பருத்தித்துறை பிர தான வீதியிலுள்ள குஞ்சர் கடைப் பகுதியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை யான கிராம சேவையாளர் ஸ்தலத்தில் பலியானதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் நெல்லியடி கிழக்கு கிராம அலுவலரும் சங்கானையைச் சேர்ந்தவருமான நவரட்ணம் ஸ்ரீஸ்குமார் (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேலும் கொற்றாவத்தை ஐயிற்றிய புலத்தைச் சேர்ந்தவர்களான தவராசா தர்சன் (வயது-21) வாமதேவன் வாசீலன் (வயது-21) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

பலியானவர் கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சமயம் கிடுகு ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்த சிறிய உழவு இயந்திரத்தை முந்திக்கொண்டு எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகள் நெல்லியடிப் பொலிஸாரினால் மேற கொள்ளபபட்டுள்ளதுடன் விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(12,100, 109,116,01,எஸ்,பா)

## அமெரிக்கா வரவேற்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. பொன்சேகாவை ஓர் அரசியல் கைதி என வர்ணித்துள்ள அமெரிக்கத் தூதுரக பேச்சாளர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலையை நாம் வரவேற்கிறோம் எனத் தெரிவித்தார்.

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிராகரித்தது ஜாதிகஹெல உறுமய

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு தமிழ்த்தேசியத்திற்கு ஆதரவான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும், பெரும்பாண்மை சிங்கள மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்துள்ளதாகவும் எனவே ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், ஆணைக்குழு பரிந்துரைகள் பற்றிய தமது நிலைப்பாட்டை வெளியிடுமாறு அரசாங்கம் அண்மையில் கோரியிருந்தது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# வன்முறை வேண்டாம்

## மருத்துவபீட ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை (18.05.2012) அன்று காலை யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகை தரும் போது பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் மாணவர் ஒருவர் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டு காயத்திற்குள்ளாகியதையிட்டு ஒட்டுமொத்த பல்கலைக்கழக சமூகம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கையில், அதேநாள் மதியம் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிய வேளையில் சிலரால் துணைவேந்தரின் அலுவலக யன்னல் உடைக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்துவதுடன் இவ்விரு நடவடிக்கைகளின் நோக்கம் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதை குழப்புவதும், அதற்கு வன்முறையை ஊடகமாக பயன்படுத்துவதுமேயாகும்.

இவ்வாறான சட்டத்தை மீறும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கிறோம்.

அத்துடன் பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்ற சம்பவம் பல்கலைக்கழகத்தின் வெளியில் மட்டுமன்றி பல்கலைக்கழகத்தினுள்ளும் பாதுகாப்பின்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

மேற்படி செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் பல்கலைக்கழக சார் ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களின் பாதுகாப்பிற்கும் குந்தகம் ஏற்படுவதை தவிர்ப்பதுடன் கல்விச் செயற்பாடுகள் சீராக நடைபெற உதவுவதுடன், எத்தரப்பினரும் வன்முறையை ஆயுதமாக பாவிக்காது அவரவர்களின் பணிகளை சரிவரச் செய்வதன் மூலம் ஒரு நல்ல சமூகத்தை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு நல்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

(சாவகச்சேரி)



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இம்மாத இறுதியில் தென்மராட்சி சமுக அபிவிருத்தி மன்றத்தினால் வறுமை காரணமாக கல்வியைத் தொடர சிரமப்படும் க.பொ.த உயர்தர மாணவர்கள், க.பொ.த சாதாரணதரம் மற்றும் அதற்கு கீழ்பட்ட வகுப்பு பயிலும் மாணவர்கள் 150 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிற்கு மாதாந்தம் தலா 500 ரூபாய் வழங்கப்படவுள்ளது. இது கல்வி பயிலும் வறியகுடும்ப மாணவர்களிற்கு ஊக்குவிப்பாக இருக்கும்.

இப்புலமைப்பரிசில் திட்டம் எதிர்வரும் 01.06.2012 அன்று ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரினால் (உதயன்) தென்மராட்சி கலாசார மண்டபத்தில் வைத்து ஆரம்பிக்கப்படவுள்ளது. (153)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2010**

**1. கலைமுதற் தேர்வு - 2010 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 15.06.2012 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 02.07.2012 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 11.06.2012 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021- 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்.**
**21.05.2012**

(C/1506)

## சிறு செய்திகள்

### முன்பள்ளியில் விளையாட்டு விழா

(வடமராட்சி)

வத்திராயன் விக்னேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஏ.திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினர்களாக வத்திராயன் கிராம அலுவலர் அ.விமலேசன், மருதங்கேணி இ.த.க பாடசாலை அதிபர் ஸ்ரீ.ஸ்ரீராமச்சந்திரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பி வடமராட்சி பிரதேச அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச எதிர்க் கட்சித் தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்க பொதுக் கூட்டம் இன்று பி.ப. 3.00 மணிக்கு சங்கத் தலைவர் ஜோ.ஜெஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பொதுசன நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

புதிய நிர்வாகத் தெரிவும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (52)

1 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**செல்வன் தீபக் ஜெய்சாந்**

அரசடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தீபக் சாந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜெய்சாந் அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று 22.05.2012 செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, அத்தைமார், மாமாமார், சித்தாமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் மற்றும் அக்கா கானுஜா, குயின்சியா, அண்ணா திலக்ஷன், மச்சாள் றஜிதா ஆகியோர் பலகலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ இனிதே வாழ்த்துகின்றனர்.

பிறைநிலா,
அரசடி, கூழாவடி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(C/1507)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### VACANCY

Applications will be received by me up to 29th June 2012 from suitably qualified candidates for the following post;

**POST - TECHNICAL OFFICER GRADE. II *SEG. A***
(Vacancies exist at the Department of Physics and Computer Unit)

**Qualifications:**

National certificate in Technology in the relevant field of specialization or its equivalent qualifications

| | |
|---|---|
| Salary Scale | : U-MT1(II) Rs.18,360-7x185;9x245-21,860 p.m |
| Selection | : By Practical Test and Interview |
| Age Limit | : Not more than 45 years |

(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **" Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover- to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section),**

**University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 29.06.2012.**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / statutory Bodies should forward their applications through their respective Heads of Departments Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

Registrar
16.05.2012

(C/1505)

தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



6 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: த. துளசிகா
முகவரி: இருபாலைச் சந்தி, கோப்பாய்.

தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது -ஹென்றி போர்டு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பார்வையும் அறிதலும்

பாடப்புத்தகங்களும் படிப்பும் சடங்காக மாறிவிட்ட அல்லது மாற்றிக்கொண்டுவிட்ட சூழலில் வாழ்கிறோம். படிப்பு என்பது வயிற்றுக்கு சாப்பாடும், வாழ வசதியும் பெற்றுத்தரும் ஒரு தொழிலுக்கான கடவுச்சீட்டு என்கிற முறையில் நம் கல்வி முறை உருவானதால் ஏற்பட்டுள்ள சீர்கேடு இது.

'ஏதோ வேறு வழியில்லாமல் படித்துத் தொலைக்க வேண்டி இருக்கிறது' என்ற எண்ணத்துடன்தான் கலைப் பாடங்களாக இருந்தாலும் விஞ்ஞானப் பாடங்களாக இருந்தாலும் கற்பவர்கள் உண்டு. கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களும் மாணவர்களின் மனநிலையையும் பரீட்சைகளுக்காக மட்டுமே தாங்கள் கற்பிப்பதையும் உணர்ந்து அவற்றை மீறமாட்டார்கள். அரசாங்கச் சுகாதாரப் பணியாளர்கள் பற்றற்றுப் பிரசாரம் செய்துகொண்டிருப்பது போல பாடம் நடத்திவிட்டுச் செல்வார்கள்.

கல்வி என்பது வேலை கிடைப்பதற்கான ஒரு சடங்காக கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி வெறும் வாழ்க்கை வசதிக்கான கடவுச்சீட்டல்ல, பிரபஞ்ச அதிசயங்களை உணர்ந்து கொள்ள அதன் மர்மங்களில் பிரயாணிக்க ஒரு துடுப்பு என்பதனை மாணவர்களை உணரச் செய்யவேண்டும். அதற்கு கல்வி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே மாற்றியமைக்க வேண்டும்.

சி.பி.ஸ்னோ என்ற விஞ்ஞானி, அறிவியலுக்கும் சமுதாய அறிவுப்புலங்களுக்கும் இடையில் விரிந்து கொண்டு போகும் அபாயகரமான பிளவினைப் பற்றிக் கூறியுள்ளார். அந்த அபாயகரமான பிளவு நம் சமுதாயத்தை வெறும் சுயநலச் சமூகமாக மாற்றியிருப்பது மட்டுமல்லாமல் புதிய சிந்தனைகளை நாடவோ தேடவோ விரும்பாதவர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

பாடசாலைக்கு வெளியே விரிந்து கிடக்கும் வாழ்வு பற்றி எதுவும் உணர்த்தும் திறனில்லாக் கல்வியைக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியேறும் நம் இளைஞர்கள், நமக்கு வெளியேயுள்ள சமூகங்கள் பற்றியோ உலகங்கள் பற்றியோ பார்வையின்றி ஒற்றைப் போக்குச் சிந்தனைகளுடன் சுருங்கிவிடுகிறார்கள். இயற்கை வளங்களையும் அதனுடன் தன் வாழ்வு பின்னிப்பிணைந்து கிடக்கும் முறைகளையும் உணராமல் பாடசாலைகள், பல்கலைகளிலிருந்து வெளிவந்து பட்டங்களை மட்டும் பெறுபவர்களாகிறார்கள்.

இவர்களில் பலருக்கு அறிவியல் என்பதெல்லாம் முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகம்சார் விஷயம். ஆடைகள், அழகு சாதனங்கள் போல தங்களை மற்றவர்களிடமிருந்து உயர்த்திக் காட்டவும் பீற்றிக் கொள்ளவுமான ஓர் அடையாளம் மட்டுமே. எனவே அறிவியல் மனப்பான்மையோ சமூக மனப்பான்மையோ வளராமல் ஆவேசம் – வெறுப்பு – வன்முறை மனப்பான்மைகளையே வளர்த்தவர்களாக உள்ளார்கள்.

இப்படித்தான் 'படித்தவர்களை'யும் 'அறிவாளிகளை'யும் கொண்ட நம் சமூகம் அழிவைத் தடுக்கவோ, அழிவிலிருந்து மீளும் வழிகளைக் காணவோ, அடுத்த சமூகங்களுக்கு இணையாக நகரவோ முடியாமல் அல்லாடுகிறது.

அறிவுடையோர் என்று சொல்லிக்கொள்ள முடிவதன் பொருள், அவர்கள் புதிய காலத்திற்கும் புதிய மாற்றங்களுக்கும் ஏற்ப மனித நடத்தைகள் ஒழுங்குகளைச் சூழலுடன் பொருத்தித் தெரிந்து கொள்கிறார்கள் என்பதே. அறிவியலின் அடிப்படையாக இருப்பது தேடல்.

தேடலை ஊக்குவிப்பதான கல்வியே நமக்கு முக்கியம். "நம்முடைய முன்னோர்களுக்கு அணுவைப் பற்றிய அறிவு இருந்தது" என்பது போல போலியான பெருமிதங்களிலும், நமது சிந்தனைக்கப்பால் சரி எதுவுமில்லை என்ற கர்வ உணர்வுகளிலும் தேங்கிவிடுவது நம் பார்வையைக் குருடாக்கிவிடும்.

விஞ்ஞானக் கற்கை என்பதும் நாம் சமூகத்தை, உலகத்தை, இன்றைய உலக யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக விரிவடைவதற்கே உதவ வேண்டும். அறிவியல் என்பது தொழில்நுட்பம் சார்ந்ததில்லை, பார்வையும் அறிதலும் சார்ந்தது. – ஆசிரியர்

# பொன்சேகாவின் விடுதலையை நிதானமாக அவதானிக்கின்றோம்

## என்கிறார் மனோகணேசன்

(கொழும்பு)

சரத் பொன்சேகா விடுதலை தொடர்பில் நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பரபரப்பு பெரும்பான்மை இன அரசியல் பரபரப்பாகும். நாம் நிலைமைகளை நிதானமாக அவதானித்து வருவோம் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட அவரது விடுதலையை நாமும் வரவேற்கின்றோம். அவரது விடுதலையின் காரணமாக மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களை நடத்துபவர்கள் நடத்தட்டும். ஆனால் நம்மால் பட்டாசு கொளுத்தி கொண்டாடமுடியாது. சிறையில் உள்ள நமது தமிழ் இளைஞர்களும் விடுதலையானால் நாமும் பட்டாசு கொளுத்தி கொண்டாடுவோம்.

நாட்டை பிடித்துள்ள நோய்களுக்கு பொன்சேகாவிடம் மருந்து இருக்கிறதா என்பது எமக்குத் தெரியாது. எனவே தற்போதைய பொன்சேகா விடுதலைப் பரபரப்பு அடங்க வேண்டும். அன்றைய எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளரது இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் என்ன என்பது தொடர்பில் முதலில் தெளிவு பிறக்கவேண்டும்.

சரத் பொன்சேகா தொடர்பில நாட்டில், குறிப்பாக பெரும்பான்மை மக்கள் மத்தியில் பெருத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டைபிடித்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடும் மக்கள், அவரை நோக்கிய எதிர்பார்ப்புகளை வளர்த்துக்கொண்டுள்ளது ஆச்சரியமானது அல்ல.

ஆனால் நாட்டைப் பிடித்துள்ள பிரச்சினைகளில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கும் மனப்பாங்கு பெரும்பான்மைக் மக்களிடமும், பெரும்பாலான பெரும்பான்மைக் கட்சிகளிடமும் இல்லை.

எனவே எந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியையும், பெரும்பான்மைத் தலைவரையும் தமிழ் பேசும் மக்கள் முழுமையாக நம்பிவிட முடியாது. குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில், குறிப்பிட்ட ஒருநோக்கத்திற்காக பெரும்பான்மை அரசியல் அமைப்புகளுடன் நாம் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இது நடைமுறை அரசியல் ஆகும் என்றார்.

# பாடசாலை செல்ல வேண்டிய சிறுவர்கள் யாழ். நகரில் ஊதுவர்த்தி விற்பனை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை செல்ல வேண்டிய சிறுவர்கள் யாழ்.நகரில் ஊதுவர்த்தி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்.மின்சார நிலைய வீதியில் நவீன சந்தைக் கட்டடத்திற்கு முன்பாகவும் மற்றும் 'மலாயன்கபே' உணவகத்திற்கு அருகாமையாகவும் சுமார் 15 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட அகவையுடைய சில சிறுவர்களே ஊதுவர்த்தி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சிறுவர்கள், விலை கூடிய ஊதுவர்த்தியினை வைத்திருப்பதோடு, அவற்றைப் பொதுமக்களிடம் வலிந்து திணித்து வாங்கும்படி வற்புறுத்துவதனையும் காணமுடிகின்றது.

இதேவேளை இச்சிறுவர்களின் வியாபாரச் செயற்பாடுகளால் குறிப்பிட்ட வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பலரும் மிகுந்த அசௌகரியத்திற்கு ஆளாவதோடு, ஆத்திரமுற்று ஊதுபத்திகளை பறித்து எறிந்துவிட்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

தற்போது யாழ்.குடா நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அவர்களது மேம்பாடு பற்றிக் கதைக்கும் மனித உரிமை ஆர்வலர்கள், இச்சிறுவர்கள் யார்? இவர்கள் எங்கிருந்து வந்துள்ளார்கள்? இச் சிறுவர்களின் குடும்பப்பின்னணி என்ன? என்பது குறித்து அக்கறை எடுப்பார்களா? என இச்சிறுவர்களால் பாதிக்கப்படும் பொதுமக்கள் பலர் கேள்வி எழுப்புவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. (138)

# ஐந்து மாதங்கள் கடந்த நிலையிலும் மீள் பரிசீலனை பெறுபேறு இல்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் விசனம்

(கொழும்பு)

நான்கு மாதங்களில் 2 இலட்சத்து 94 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட போதிலும் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பித்த 1 இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்களுக்கு ஐந்து மாதங்களாகியும் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

உயர்கல்வி விடைத்தாள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பித்த மாணவர்களிடம் பரீட்சைகள் திணைக்களம் அதிக கட்டணத்தை பெற்றுக் கொண்டதாக அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் 16 மாணவர்களும் இலங்கை ஆசிரியர் சங்கமும் இணைந்து வழக்குத் தாக்கல் செய்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீள்பரிசீலனைக்காக விண்ணப்பித்து மாணவர்கள் எதிர் காலத் திட்டங்களுக்காக காத்துக கொண்டிருக்கும் நிலையில் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பின்றி செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு விரைவில் மீள்பரிசீலனைப் பெறுபேறுகளை வெளியிடுமாறு ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தெரிவுக்குழுவில் ஜே.வி.பி.பங்கேற்காது உறுதிப்படுத்தினார் சோமவன்ச

(கொழும்பு)

அரசினால் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவில் ஜே.வி.பி. பங்கேற்காது என அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அரசு ஏற்படுத்த இருக்கும் தெரிவுக் குழுவால் எவ்வித பிரச்சினைகளும் தீர்க்கப்படப் போவதில்லை. ஆகவேதான் உத்தியோகபூர்வமாக மட்டுமல்ல, உறுதியாகவே சொல்கின்றோம் ஜே.வி.பி. தெரிவுக்குழுவில் பங்கேற்காது

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் ஜே.வி.பி. உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என அரசு கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து இது தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு; நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நடக்கப்போவது ஒன்றுமில்லை. எனவே, அதில் நாம் அங்கம் வகிக்கமாட்டோம் என்பதை ஆரம்பத்திலேயே கூறிக்கொள்ள விரும்புகின்றோம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு இதற்கு முன்னர் எத்தனை தடவைகள் வட்டமேசை மாநாடு நடைபெற்றன. எத்தனை தடவைகள் சர்வகட்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றின் மூலம் கண்ட பயன்தான் என்ன? எனவே, தெரிவுக்குழுவும் அவ்வாறுதான் அமையப் போகின்றது

இந்த அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணப்போவதில்லை. எனவேதான், அரசிடம் சொல்கின்றோம், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவையுங்கள். இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளை வழங்குங்கள் வாழ்க்கையை இழந்து தவிக்கும் மக்களுக்கு வாழ்வு கொடுங்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள் இவற்றை விடுத்து ஏன் அடுத்த கட்டத்துக்குச் செல்லவேண்டும் தெரிவுக்குழுவுக்கு ஜே.வி.பி. வராது என அரசுக்கு நன்கு தெரியும். எமது உறுப்பினர்கள் நாடாளுமன்றில் வைத்தும் கூறியுள்ளனர். எனவே, மீண்டும் சொல்கின்றேன் பயனற்ற தெரிவுக்குழுவுக்கு ஜே.வி.பி. வராது எனத் தெரிவித்தார்.

# இலக்குடனான முயற்சியே சாதனைக்கு வழிகோலும்

## அருட்பணி தமிழ்நேசன் அடிகளார்

(மன்னார்)

வீட்டுச் சமையலில் இருந்து விண்வெளிப் பயணம் வரை இன்று விஞ்ஞானத்தின் வியக்க வைக்கும் வளர்ச்சி காணப்படுகின்றது. இன்றைய நவீன விஞ்ஞான உலகில் ஒருவர் தன்னை நிலைநிறுத்த வேண்டுமாயின் கடின உழைப்பும் விடாமுயற்சியும் அவசியமாகும். தடைக்கற்களையும் படிக்கற்களாக்கி சாதனை இலக்கை நோக்கி இளைய சமுதாயம் முன்னேற வேண்டும் என மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமாகிய அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மன்னாரில் ஸ்ரார் றீஜன்ற் இன்ரநஷனல் (Star Regent International (pvt Ltd) என்ற கணினி மற்றும் ஆங்கில கற்கை நெறிக்கான கல்லூரியின் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடைக்கற்களையும் படிக்கற்களாக்கி சாதனை இலக்கை அடைந்தவர்தான் உலகத்தின் பணக்காரர் வரிசையில் உச்சியில் நிற்கும் பில் கேட்ஸ். தொடர்ந்து 12 ஆண்டுகளாக உலகின் முதலாவது பணக்காரராக பில் கேட்ஸ் வலம் வந்துகொண்டிருக்கிறார். இன்றைய இளைய சமுதாயம் இத்தகைய சாதனை இலக்கோடு பயணிக்க வேண்டும். வெறும் கனவுகள் மட்டும் இருந்தால் போதாது அக்கனவை அடைய விடாமுயற்சியும் வேண்டும்.

இன்றைய நவீன உலகில் ஒருவர் முன்னேற வேண்டுமாயின் அவர் இரண்டு விதமான அறிவை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். ஒன்று ஆங்கில அறிவு மற்றது கணினி அறிவு. இந்த இரண்டு அறிவையும் வழங்கும் ஒரு சிறப்பான நிறுவனமாக இந்த ஸ்ரார் றீஜன்ற் இன்ரநஷனல் நிறுவனம் விளங்குகிறது. இந்த நிறுவனம் மன்னார் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இந்த நிறுவனம் வழங்கும் வாய்ப்புகளை இளைய தலைமுறையினர் நன்கு பயன்படுத்த வேண்டும் என்றார். (21)



# கல்லாரை மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கல்லாரைப் பகுதி மக்களின் நீண்ட நாள் குடிநீர்ப் பிரச்சினைக்கு தெல்லிப்பளைப் பொலிஸாரினால் முடிவு காணப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக வருகை தந்த கஸ்தூரி ஆராய்ச்சி அப்பகுதி சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்கு கிராம அலுவலர் பிரிவுக்குப் பொறுபபான பொலிஸ் அலுவலர் சார்ஜன்ட் ராஜபக்ஷவுடன் சென்ற வேளையில் அப்பகுதி மக்கள் தமது குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக முறையிட்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரியும் கிராம அலுவலர் பகுதி பொலிஸ் அலுவலரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சுமார் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட குழாய்க் கிணறு கல்லாரை வளர்மதி சன சமூக நிலைய முன்றலில் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லியனகே கமகே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு குழாய்க்கிணறு மூலம் குடிநீர் பெறும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் எஸ்.சிவநாதன், சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர் எஸ்.முத்துநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சோ.பத்மநாதனின் உருவாக்கத்தில் 'பர்மிய பிக்கு சொன்ன கதைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிககு யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் (எம்.ஆர்.ரி.சி.) நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன், வெளியீட்டுரையை தென்னித்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை இ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக்கொள்வதுடன், நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிவலிங்கராஜா வழங்கவுள்ளார்.

# வவுனியாவில் போலி நடத்துநரிடம் ஆயிரம் ரூபாவை இழந்த யுவதி

(வவுனியா)

வவுனியா-இரண்டாம் குறுக்கில் உள்ள தனியார் பேருந்து நிலையத்தில் பேருந்து நடத்துநர் எனக் கூறி பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த ஒருவரிடம் பயணி ஒருவர் ஆயிரம் ரூபாவை இழந்த சம்பவம் ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வவுனியா தனியார் பேருந்து நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் புறப்படுவதற்குத் தயாராக இருந்த பேருந்தில் நபர் ஒருவர் "யாழ்ப்பாணம்...யாழ்ப்பாணம்" எனக் கூவி அழைத்து பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் செல்வதற்கான பயணிகள் பேருந்தில் ஏறிக்கொண்டனர். இந்நிலையில் பேருந்தில் ஏறியிருந்த இளம் யுவதி ஒருவரிடம், தான் இந்தப் பேருந்தின் நடத்துநர் எனவும் ஆயிரம் ரூபா தரும்படியும் டிக்கட் வாங்கும் போது மீதிப்பணம் தருவதாகவும் கூறிப் பெற்றுள்ளார்.

சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த வேறு நடத்துநரும் சாரதியும் பேருந்தில் பயணத்தைத் தொடர தயாராகியதுடன், பயணிகளுக்கான பயணச் சிட்டைகளையும் வழங்கினர்.

இந்நிலையில் சிலகண நேரத்திற்கு முன்னர் பணம்பெற்ற நபர் தொடர்பாக நடத்துநரிடம் அந்த யுவதி தெரியப்படுத்தினார். அப்போது தாங்கள்தான் பேருந்தின் சாரதியும், நடத்துநரும் எனக்கூறிய அவர்கள் இச்சம்பவம் .தொடர்பாகத் திகைப்படைந்து நின்றனர்.

இச்சம்பவம் அவ்விடத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனையடுத்து குறித்த பயணி பணத்தை இழந்த நிலையில் பேருந்தில் இறங்கி நின்றுள்ளார். அந்தப் பேருந்து தனது யாழ்ப்பாணப் பயணத்தை ஆரம்பித்தது.

சுமார் 20 நிமிட நேரங்களின் பின் பணம் கையாடல் செய்த குறித்த நபர் அவ்விடத்திற்கு வந்துள்ளார். அதில் நின்றவர்கள் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து நையப் புடைத்ததுடன் அவரை பொலிஸில் ஒப்படைத்தனர். (ஜெ)

# திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி புனித நீற்றம்மாள் ஆலயத் திருவிழாத் திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் என ஆலயப் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

# சில்லறைக்கு தட்டுப்பாடு


(வரணி)

யாழ்.குடாநாட்டில் பரவலாக வர்த்தக நிலையங்கள் மற்றும் பேருந்துகளில் சில்லறை நாணயத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர் வர்த்தகர்கள் மீதிப் பணத்திற்கு தீப்பெட்டி, இனிப்பு வகைகளை வழங்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பேருந்துகளில் பயணம் செய்பவர்களும் மீதிப்பணத்தை வழங்குவதில் நடத்துநர்கள் சிரமப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

# மாகாண வீதிகள் புனரமைப்பு; அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

மாகாண வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கூட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழிலுள்ள ஆளுநர் உபஅலுவலகத்தில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வடமாகாணத்திலுள்ள வீதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் உயர் அதிகாரிகள் மத்தியில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அதிகாரிகளாலும் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உலக வங்கியின பிரதிநிதிகள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் உயர் அதிகாரிகள், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண உட்கட்டுமான அபிவிருத்தி, மீள்கட்டுமான அமைச்சின் செயலாளர் எந்திரி ஏ.ஈ.எஸ்.இராஜேந்திரா, பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) இ.உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# வேலணை பிரதேச சபையால் ஆதன விபரம் திரட்டும் செயற்பாடு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையால் முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் வட்டார ரீதியாக ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி அல்லைப்பிட்டி உபஅலுவலகம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஆதனத்திற்குரிய காணி உறுதியின் மூலப்பிரதி அதன் போட்டோப் பிரதி, குடும்ப அட்டை மூலப் பிரதி அதன் போட்டோப் பிரதி, காணி நிலஅளவைப் படத்தின் மூலப்பிரதி அதன் போட்டோப் பிரதி என்பவற்றைக் காண்பித்து ஒவ்வொரு ஆதனத்துக்குமான தகவல் திரட்டுப் படிவத்தைப் பூரணப்படுத்த அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது ஆதன உரித்தைப் பேணும் படியும் தவிசாளர் சி.சிவராசா கேட்டுள்ளார். இதற்கமைய ஆதன உரித்தாளர்கள் 1ஆம் வட்டாரம், 2ஆம் வட்டாரம் எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதியும், 3ஆம் வட்டாரம், 4ஆம் வட்டாரம், 5ஆம் வட்டாரம் ஜூன் மாதம் 6ஆம் திகதி முதல் 25ஆம் திகதியும் அல்லைப்பிட்டி உப அலுவலகப் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# மந்திகை வைத்தியசாலையில் மனநோயாளர்களுக்கு 2 நாள் கிளினிக்

(வரணி)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் உளநல நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான கிளினிக் சிகிச்சை வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்று வருகிறது.

செவ்வாய், வியாழன் போன்ற கிழமை நாட்களில் நடைபெறும் இக் கிளினிக்குக்கு 10 மணிக்கு முன்பு சென்று தமது கிளினிக் அட்டைகளைச் சமர்ப்பித்து சிகிச்சையைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட காரணங்களால் உடல், உள ரீதியாகப் பாதிப்பிற்குட்பட்டவர்கள் இக்கிளினிக்கில் சிகிச்சை பெற்று வருவதுடன், 65 - 70 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாக வைத்தியாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (150)

# வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

பாசையூரில் இருந்து திருச்சிலுவைக் கன்னியர்மடம் அமைந்திருக்கும் கடற்கரை வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த இந்த வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்ட பின்னர் மக்களின் போக்குவரத்துக்கு இந்த வீதி பெரும் சிரமமாகக் காணப்படுகிறது. இந்த வீதியாலே கொழும்புத்துறை செல்லும் தனியார் பேருந்து முதல் மீனவர்களின் வாகனங்கள் அனைத்தும் சென்று வருகின்றன. ஆகவே கம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியைத் திருத்தித்தருமாறு அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (21)

# மறவன்புலோ கிராமத்தின் அபிவிருத்தி குறித்து ஆய்வு

(யாழ்ப்பாணம்)



மறவன்புலோவில் உடனடியாக மீள்குடியேறும் மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் இதுவரை நில அளவீடுகளை மேற்கொள்ளாத மக்களின் காணிகளை அளவீடு செய்வதற்கும் அவர்களுக்கான உரிமத்தினை பெற்றுக் கொடுப்பதற்குமான பொறுப்பையும் நாம் ஏற்க தயாராக உள்ளோம். அத்தோடு மீள் குடியேறும் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளையும் நாம் மேற்கொள்ளவுள்ளோம் என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்து அம்மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட 4 ½ இலட்சம் வரையான மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனவே மீள்குடியேற்றம் நடைபெறும் பகுதியில் மக்கள் முழுமையாக குடியேறும் போது அம் மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் துரிதப்படுத்த முடியும் என்றார்.

மக்கள், தாம் எதிர் கொள்ளும் காணி உரிமம் மற்றும் வாழ்வாதாரம், போக்குவரத்து, வீட்டு வசதி உட்கட்டுமாணம் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இது தொடர்பாக அப் பகுதிக்கு சென்று ஆய்வு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் மக்களின் வீடுகளுக்கும் சென்று நிலைமைகளை நேரில பார்வையிட்டார். அத்தோடு அப்பகுதிக்கான பிரதான வீதியாகிய மணற்காட்டு வீதியை புனரமைப்பதற்கும் சாலாவயல் எனும் குளத்தினை புனரமைப்பதற்கும் நிரந்தரவீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அத்தோடு அப் பகுதிக்கான மேலும் ஒரு கிலோ மீற்றர் வீதியினை அமைப்பதற்கும் மின் வசதிகள் அற்ற வீடுகளுக்கு மின் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ் ஆய்வின் போது பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் திருமதி ரகுநாதன், கிராம அலுவலர் கானமூர்த்தி, அறவழி போராட்டக்குழுத் தலைவர் ஜீவானந்தம், உறுப்பினர் நடராஜா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச அமைப்பாளர் வலன்டயன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இமானுவேல் டயஸ் மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர.

# ஆசிரியைக்கு அமுதவிழா

(தீவகம்)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி சோ.புவனேஸ்வரியம்மாவின் 80 ஆவது அகவையை யொட்டிய அமுத விழா கடந்த சனிக்கிழமை மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கலாநிதி செ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், திருமதி சறோஜினி, வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈ.பி.டி.பி வேலணை அமைப்பாளருமான சி.சிவராசா, தீவக வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.ஜோன் குவின்டஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீவகத்தில் இருக்கின்ற கல்விமான்களை கௌரவிக்கும் நிகழ்வானது வரவேற்கத்தக்கது. மேலும் கல்வியில் இப்பிரதேச மாணவர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயற்றிட்டத்தின் கீழ் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம் என பிரதேச சபைத் தலைவர் சிவராசா இதன் போது தெரிவித்தார்.

(85)

# வடமராட்சி கல்வி வலயத்தில் சமூக விஞ்ஞானப் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய சமூக விஞ்ஞானப்போட்டி அடுத்தமாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வகுப்பு ரீதியாக பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும். அத்துடன் மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கும் அம்பனுக்கு அப்பாலுள்ள பாடசாலை மாணவரகளுக்கும் மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கோட்ட பாடசாலைகளுக்கு வடமராட்சி கிழக்கு அம்பனுக்கும் அதற்குட்பட்ட பாடசாலைகளுக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும் கரவெட்டி கோட்ட பாடசாலைகளுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குரிய நேர அட்டவணையில் தரம் 6, 7 இற்கு காலை 9.00 மணியிலிருந்து 9.30 மணிவரையும், தரம் 8, 9 இற்கு 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரையும் தரம் 12, 13 இற்கு 10.30 தொடக்கம் 12.00 மணிவரையும் நடைபெறவுள்ளது.

சகல போட்டியாளர்களும் உரிய நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(109)

# குற்றச் செயல்களை தடுக்க பொலிஸார் ரோந்து நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்குமுகமாக ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் 4 பேர் கொணட பொலிஸ் குழு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக. யாழ்.பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் இல்லாத நிலையில் அங்கு சட்ட ஒழுங்குகள் எவ்வாறு பேணப்படுகின்றமை தொடர்பாக கேட்கப்பட்டபோது பொலிஸார் இதனைத் தெரிவித்தனர். காரைநகரில் பொலிஸ் நிலையம் இல்லாத நிலையில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடியாத நிலை காணப்பட்டது.

இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவினால் 4 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் காரைநகர் பிரதேசத்தில் மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிவரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் போது குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இதனையும் மீறி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை பொன்னாலையில் வைத்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும், ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் எனவும் பொலிஸாரினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பா)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளில் பரதநடனம், சித்திரம் ஆகிய பாடங்களை தரம் 9, 10, 11 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு குறித்த பாடங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொருவரை மட்டும் அனுப்பி வைக்க வேண்டும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(109)

# முரசின் இன்றைய பலன்

(22.05.2012 –செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 09 ஆம் திகதி. பிரதமை காலை 7.33 வரை.
நட்சத்திரம் ரோகிணி பிற்பகல் 3.25 வரை.அமிர்த சித்தம்.
இராகுகாலம் 2.52 - 4.22 வரை. சுபநேரம் 10.22 - 11.52 வரை.
எமகண்டம் 8.52 - 10.22 வரை. குளிகைகாலம் 11.52 - 1.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுபதினம், நினைத்த காரியம் நிறைவேறும், மருத்துவச் செலவுகள், தொட்டது துலங்கும். |
| ரிஷபம் | கவலை அதிகரிப்பு, சொத்துக்களால் இலாபம், பொன்பொருள் சேரும், கனவு நனவாகும். |
| மிதுனம் | காலதாமதம், தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும், உத்தியோகத்தர்களுக்கு நிம்மதி, நல்ல நாள். |
| கடகம் | கவலைகள் மறையும், முற்கோபத்தை தவிர், உறவினருடன் சஞ்சலம், ஸ்தல யாத்திரை. |
| சிம்மம் | மனத்திருப்தி, எதிரிகள் பலம் குன்றும், சேமிப்பு பெருகும், நினைத்தது நிறைவேறும். |
| கன்னி | அலைச்சல், மனைவி பிள்ளைகளால் செலவு, முயற்சிகளில் சிறு தடைகள், பதவி உயர்வு. |
| துலாம் | கவனம் தேவை, குடும்பத்தில் கருத்து வேறுபாடு, தடைகளுக்குப் பின் சுபகாரியம். |
| விருச்சிகம் | சிறு பயணம், கனவுத் தொல்லைகள், சுப காரிய முயற்சிகள், குடும்ப ஒற்றுமை பாதிப்பு. |
| தனுசு | அன்னியர் சகாயம், புத்திரர் வழியில் மகிழ்ச்சி, குடும்பத்துடன் பயணம், மணவாழ்வு கிட்டும். |
| மகரம் | உடல் நலம் நன்று, வேலைப்பளு அதிகரிப்பு, எதிர்பாராத இடமாற்றம், வேலைவாய்ப்பு. |
| கும்பம் | நற்கீர்த்தி, சீரான உடல் ஆரோக்கியம், பூர்வீக சொத்துக்களால் அனுகூலம், பாராட்டு. |
| மீனம் | அபகீர்த்தி, அனாவசியச் செலவுகள், பேச்சில் நிதானம், இரவல் வாங்குவதை தவிர்க்கவும். |




புதுப்பொலிவுடன் திகழும் புங்குடுதீவு புனித சவேரியர் ஆலய 100 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் கோலாகலமாக ஆரம்பமாகியது. ஆலயத்தின் முற்புறத் தோற்றத்தினையும், திருச்சொரூப பவனி இடம்பெறுவதனையும் காணலாம்.



# சாதனை படைத்த வீராங்கனைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராட்டு

வரலாற்றில் முதற்தடவையாக யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய ரீதியில் சாதித்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வலைப்பந்தாட்ட அணியினருக்கும் ஏனைய விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்தோருக்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் இல்லத்திற்கு கடந்த 20ஆம் திகதி தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் கிண்ணம் வென்ற யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆடிய வீர வீராங்கனைகளைச் சந்தித்த போதே அவர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

வீர வீராங்கனைகளுடனான சந்திப்பின் போது அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது

கடந்த கால தவறான தமிழ் அரசியல் தலைமைகளின் வழிநடத்தல் காரணமாகவே யாழ். மாவட்டத்தினது விளையாட்டுத்துறையும் பின்னோக்கிப் போனது.

எனவே நாம் இருக்கின்றதைப் பாதுகாத்துக் கொண்டு அதிலிருந்து முன்னேற வேண்டும் என்பதுடன் விடாமுயற்சியுடன் வியர்வை சிந்துவதனூடாகவே வெற்றிகளையும், சாதனைகளையும் நிலைநாட்ட முடியும் எனத் தெரிவித்தார்.

# தேசிய மட்ட வலைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட அணி சம்பியன்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்டதேசிய ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதல் தடவையாக சம்பியனாகியுள்ளது.

கொழும்பு மகரகம தேசிய விளையாட்டரங்கில் கடந்த 20ஆம் திகதி இந்த இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட அணியும், களுத்துறை மாவட்ட அணியும் மோதின. யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி பங்குபற்றின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதலிரண்டு பகுதி ஆட்டங்களிலும் யாழ். மாவட்ட அணி முன்னிலை வகித்தது. இதில் 13-10, 14 - 08 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றிருந்தது. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை 27-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து இரு அணிகளும் பலமான முறையில் போட்டியிட்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது பாதி ஆட்டத்தில் 07-10, 8-9 என்ற புள்ளிகளை யாழ். மாவட்ட அணி பெற்றுக் கொண்டது. இறுதியில் ஒட்டுமொத்தமாக 42-37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று யாழ். மாவட்ட அணி தேசிய மட்ட சம்பியனாகியது. இப்போட்டித் தொடரில் 26 அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன்

இதற்கு முன்னர் 2005ஆம் ஆண்டு தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 3ஆம் இடத்தையும், இவ்வாண்டு மார்ச் மாதம் வலைப்பந்தாட்ட சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மும்பை இன்டியன்ஸ் இலகுவான வெற்றி

(ஜெய்ப்பூர்)

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கெதிரான கடைசி லீக் போட்டியில் டுவைய்ன் ஸ்மித் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் மும்பை இந்தியன்ஸ் அணி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றியீட்டியது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்களைக் குவித்தது.

மும்பை இந்தியன்ஸ் அணிசார்பாக தவால் குல்கர்னி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன், லசித் மலிங்க மற்றும் கைய்ரோன் பொலாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

163 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 18 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை எட்டியது. இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டுவைய்ன் ஸ்மித் 58 பந்துகளில் 87 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 58 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

வெற்றி குறித்து ஹர்பஜன்சிங் குறிப்பிடுகையில், இதே போன்று அனைத்து துடுப்பாட்ட வீரர்கள் ஆடும் பட்சத்தில் கிண்ணத்தை இலகுவாக கைப்பற்றிக் கொள்ள முடியும். இருப்பினும் டில்லி, கொல்கத்தா, சென்னை அணிகள் சவால்களை எதிர்கொள்ளு கிண்ணத்தை கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்போம். அந்த அணிகளுக்கு எதிராக ஆடக் கூடிய திறமையான வீரர்கள் எமது அணியில் உள்ளனர் என்றார்.

## கால்பந்துப் போட்டி

# இலங்கை அணி தோல்வி

பலஸ்தீனத்தில் நடைபெற்றுவரும் அல் நக்பா கிண்ண கால்பந்து போட்டியில் இலங்கை அணி ஜோர்தானிடம் 0-2 என தோல்வியைச் சந்தித்தது. இதில் ஜோர்தான் அணி தனது 22 வயதுக்கு கீழானோருக்கான வீரர்களையே பங்கேற்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது ஆண்டாகவும் நடைபெறும் அல் நக்பா கிண்ண போட்டியில் இலங்கை அணி கடந்த வெள்ளிக்கிழமை ஜோர்தானை சந்தித்தது. ஸைப் பூஹஸைனி அரங்கில் நடந்த இந்த ஆட்டத்தில் இலங்கை அணி ஆரம்பத்தில் ஜோர்தான் வீரர்களுக்கு ஈடுகொடுத்து ஆடினர்.

எனினும் போட்டியின் 40 ஆவது நிமிடத்தில் இலங்கை தற்காப்பு வீரர்களின் தவறால் ஜோர்தான் முதல் கோலைப் போட்டது. ஜோர்தான் வீரர் மொன்சர் அபு அமரா முதல் கோலைப் போட்டார். பின்னர் இரண்டாவது பாதியின் ஆரம்பத்திலேயே ஜோர்தான் இரண்டாவது கோலையும் போட்டது. இலங்கை தற்காப்பு வலையத்தை முறியடித்த முஸாப் அல்லஹ்மான் அந்த கோலை போட்டார். இதன் மூலம் ஜோர்தான் அணி போட்டியில் 2-0 என வென்றது.

இலங்கை அணி அடுத்து நப்லுஸ் அரங்கில் துனிஷ்யாவை எதிர்கொள்கிறது. இந்த போட்டியில் குறைந்தது மூன்று கோல் வித்தியாசத்தில் வென்றால் இலங்கை அணியால் அரையிறுதிக்கு முன்னேற முடியும். துனிஷியா தனது 20 வயதுக்கு கீழான அணியையே பங்கேற்கச் செய்துள்ளது.

# கிப்ஸ் ஒப்பந்தம்

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வரும் தென்னாபிரிக்க வீரர் கிப்ஸ் அடுத்து முதலாவதுஇலங்கை பிரிமியர் லீக் தொடரில் (ஒகஸ்ட்) விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து டுவிட்டர் இணையத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள தகவலில், ஐ.பி.எல். முடிந்ததும், இங்கிலாந்து சென்று யு.கே இருபது -20 ட்ர்ஹாம் அணிக்காக விளையாடிவிட்டு அங்கிருந்து இலங்கை சென்று எஸ்.எல். பி எல். தொடரில் விளையாடப் போகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# எனது ஆட்டமிழப்பே திருப்புமுனை


எனது ஆட்டமிழப்பே போட்டியின் திருப்புமுனையாக அமைந்துவிட்டது என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக் கப்டன் ஹோலி தெரிவித்தார்.

துடுப்பாட்ட வீரர்களின் மோசமான ஆட்டத்தால் தோல்வி அடைந்தோம். ஆடுகளத்துக்குத் தகுந்தவாறு துடுப்பாட்ட வீரர்கள் சரியான ஷொட்களை அடிக்க தவறி விட்டனர். 24 பந்தில் 30 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் நான் ஆட்டமிழந்ததுதான் ஆட்டத்தின் போக்கை மாற்றிவிட்டது. எனது ஆட்டமிழப்பு திருப்புமுனையாகிவிட்டது.

ஆடுகளம் துடுப்பாட்டம் செய்வதற்கு மிகவும் கடினமாக இல்லை. ஒட்டு மொத்தமாக இந்த தொடரில் நாங்கள் சிறப்பாகவே விளையாடினோம். சில ஆட்டங்களில் தோற்றதால்

ஓட்ட வீத அடிப்படையே பாதிப்பை ஏற்படுத்தியது. சில தவறுகளில் இருந்து பாடம் கற்று அடுத்த ஐ.பி.எல். போட்டியில் நாங்கள் வலுவான அணியாக உருவெடுப்போம் எனத் தெரிவித்தார்.

வெற்றி குறித்து டெக்கான் சார்ஜர்ஸ் கப்டன் சங்ககரா கூறிப்பிடுகையில், கடைசி ஆட்டத்தில் உள்ளூர் மைதானத்தில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. ஷிகார் தவான், ஸ்டெய்ன், மிஸ்ரா, பார்த்தீவ் பட்டேல் போன்ற இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். சிறந்த அணியை கடைசி ஆட்டத்தில் வீழ்த்தியிருக்கிறோம் எனத் தெரிவித்தார்.



# இங்கிலாந்து அணிக்கு வெற்றியிலக்கு 191

(லண்டன்)

லோட்ஸ் டெஸ்டில் 191 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி ஆடி வருகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. 155 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சந்தர் போல், சாமுவேல்ஸ் ஆகியோர் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவு அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி 345 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தர்போல் 91, சாமுவேல்ஸ் 86, ராம்டீன் 43, டரன் சமி 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புரோட் 4, ஸ்வான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஸ்ரோஸ் ஒரு ஓட்டத்துடன், அன்டர்சன் ஓட்டம் பெறாமலும் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரோச் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி இப்போட்டியில் இன்னும் 181 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது. மேற்கிந்தியத்தீவுகள் முதல் இனிங்ஸ் 243. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 398



# கிண்ணம் வென்றார் ஷரபோவா

(ரோம்)

ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் கிண்ணத்தை ரஷ்யாவின் மரியா ஷரபோவா கைப்பற்றினார்.

இத்தாலியின் தலைநகர் ரோமில் நேற்று முன்தினம் நடைபெற்ற ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சீனாவின் லி நா மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை லி நா கைப்பற்றினார். இதன் பின்னர் எழுச்சி கண்ட ஷரபோவா மிகவும் சிறப்பான முறையில் ஆடி அடுத்த இரண்டு செட்களையும் கைப்பற்றினார். இறுதியில் 4-6, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் வென்ற மரியா ஷரபோவா ரோம் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை தன்வசப்படுத்திக் கொண்டார்.

கிண்ணம் வென்ற பின் கருத்துத் தெரிவித்த ஷரபோவா, இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதே எனது இலக்கு. அதற்காக கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள வேண்டி வரும். இருப்பினும் அதே நோக்கிப் பணயிக்க முற்படுவேன் என்றார்.

# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியை துவம்சம் செய்த கிளிநொச்சி ம.வி

(கிளிநொச்சி)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் மற்றும் 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி சிறப்பான வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கிரிக்கெட் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டு 9 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட இப்போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி முதலில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் 14 ஓவர்கள் நிறைவில் 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அனைத்து வீரர்களுமே சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பாலா மிகச் சிறப்பான முறையில் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் விதுசன், ரஜீவன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 17 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தனுசன் 19 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து 15 ஓவர்களைக் கொண்ட போட்டி இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 15 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடிய விதுல்ஜன் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

## விளையாட்டு விழாவும் மைதான திறப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையமும், ஐயனார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் ஐயனார் விளையாட்டுக்கழகத்தின் முதலாவது விளையாட்டு விழாவும், மைதானத்திறப்பு விழாவும் நாளை செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஐயனார் விளையாட்டுக்கழகத் தலைவர் நவரத்தினம் பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வேலணை பிரதேச சபைத் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் வேலணை அமைப்பாளருமான சின்னையா சிவராசா மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ம. ஜெயக்காந்தன், வேலணை பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் விருந்தினர்களின் உரையும், போட்டிகளும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (138, ஞா)

## மிகவும் சிறப்பாக நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

குழந்தைகள் காப்பக சிறுவர் பூங்கா முன்பள்ளியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி கடந்த 19ஆம் திகதி நண்பகல் 1.30 மணிக்கு சைவபிரகாசவித்தியாலய மைதானத்தில் முன்பள்ளி அதிபர் ப.தனபாலன் தலைமையில் நடைபெற்றது

பிரதம விருந்தினர்களை அணிநடை குழுவினர் அழைத்து வந்தனர். ஒலிம்பிக் தீபத்தினை பிரதம விருந்தினர் க. விமலநாதன் ஏற்றிவைத்து விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்

மாணவ, மாணவிகளின் வரவேற்பு நடனம், பொம்மை பரிமாற்றம், சங்கீதக் கதிரை, சைக்கிள் ஓட்டம், தொப்பி பரிமாற்றம், கார் ஓட்டம், சொத்துச்சேர்த்தல், றெயின் பெட்டி இணைத்தல், இடைவேளை. உடற்பயிற்சி கண்காட்சி, பந்து பரிமாற்றம்கொடிநாட்டல், கணிதமொழித் தேர்ச்சி பட்டம் ஏற்றல் ஆங்கிலமொழி தேர்ச்சி, அஞ்சலோட்டம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், வினோத உடை கண்காட்சியுடன் பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது

வரவேற்பு நடனம் ஆடியோர் இசைக்கு ஏற்றவாறு தங்கள் அங்கங்களை அசைத்து நடனம் ஆடினார்கள் சைக்கிள் ஓட்டம் சிறுவர்களுக்குரிய பாதுகாப்பான சைக் கிள்' மாமரத்தை 8முறை வட்டம் சுற்றி வரவேண்டும் என்பன போட்டிக்கான விதி முறையாகும் பாரம்பரிய விளையாட்டுகளாக விளங்கும் முட்டி உடைத்தலானது மாணவ, மாணவிகள் கண்களை மூடியவாறு உயரத்தில் உள்ள முட்டியை தடியினால் உடைக்க வேண்டும் கயிறு இழுத்தல் நிகழ்வில் கயிற்றுக்குப் பதிலாக சாறியினைக் கயிறாகப்பயன்படுத்தி திறமைக்ள் பரிசோதிக்கப்பட்டது. (சி)

## வலைப்பந்தாட்டப் போட்டி அராலி சரஸ்வதி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் இமையாணன் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலயமும், இரண்டாமிடத்தை பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயமும், மூன்றாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக் கொணடன.

17 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலயமும், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இதேவேளை, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் தகுதி பெற்றுள்ளன. இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இப்பிரிவின் மூன்றாமிடத்தை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்குது. (12, 93)

## 7 விக்கெட்டுக்களால் யாழ். சென்றல் வெற்றி

(யாழ்ப்பாணம்)

அரியாலை சென்றல் அணிக்கெதிரான போட்டியில் யாழ். சென்றல் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய அரியாலை சென்றல் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வசீகரன் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விமலகாந்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது கபில்தேவ் 46, றொகான் ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் சலிஸரன் 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஏகனந்தன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (07)



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய அணியும், மன்னார் சென். சேவியர் அணியும் மோதின. இப்போட்டியில் மன்னார் சென். சேவியர் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன் மூலம் தேசிய மட்டப் போட்டிக்கு மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி தகுதிபெற்றுள்ளது. இப்போட்டியை வவுனியா மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்க இணைப்பாளர் ம. அனஸ்ரீன் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஆடிய இரு அணி வீரர்களும், விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். (12)

# எதிர்ப்பரசியலும்; அதிசயத்திற்குக் காத்திருத்தலும்!



**அரசின் எதேச்சாதிகாரத்திலிருந்து மீண்டெழும் நோக்கில் திரண்டெழுந்த நாம் எமது போராட்டத்தின் வீழ்ச்சிக்கு அல்லது அழிவுக்கு, குறித்த அரசையே காரணம் காட்டுவதில் என்ன தர்க்கம் இருக்க முடியும்.**

- யதீந்திரா கட்டுரையிலிருந்து

தமிழ் அரசியல் சூழலில் இடம்பெற்றுவரும் சில விமர்சனங்களை அவதானிக்கும்போது ஒரு விடயம் வெள்ளிடைமலையாகிறது. சிலர் ஈழத் தமிழர் நலன்களை வெறுமனே புலி ஆதரவு -எதிர்ப்பு என்னும் முரண்சோடி வாதத்துக்குள் முடக்க முயல்கின்றனர். சடுதியாகவே புலிகள் மீதான விமர்சனங்களை, தமிழ்த் தேசியத்திற்கு எதிரான ஒன்றாக அர்த்தப்படுத்திக் கொள்கின்றனர் - இதன் மூலம் அரச ஆதரவாளர்கள், இந்திய ஆதரவாளர்கள் அல்லது தமிழ்த் தேசிய விரோதிகள் போன்ற முத்திரை குத்தல்கள் அவ்வாறானவர்கள் மத்தியில் இலகுவாகி விடுகின்றன.

ஆனால் கடந்த காலங்களில் அத்தகைய முத்திரை குத்தல்களால் எதைச்சாதிக்க முடிந்தது என்று கேட்டால் எவரிடமும் பதிலில்லை. அப்போதும்கூட அவர்களிடமிருக்கும் இலகுவான பதில் - இவர்கள் அனைவரும் 'துரோகிகள் என்பதாகத்தான் இருக்கும். உண்மையில், விடயம் ஈழத் தமிழர் நலனை எவ்வாறு வெற்றி கொள்ளுதல் என்பதேயன்றி புலி ஆதரவா அல்லது புலி எதிர்ப்பா என்பதல்ல.

புலிகள் மீதான விமர்சனங்களை புலி எதிர்ப்பாகச் சுருக்கி முத்திரை குத்த முயல்வோருக்கு ஒரு விடயத்தைச் சொல்ல முடியும் - புலிகள் மீதான விமர்சனங்கள் என்பவை, கடந்த காலத்தின் நீட்சியான,நிகழ் காலத்தில் நிலைகொண்டுள்ள ஒரு மனிதனின் கடந்த காலம் குறித்த தேடலன்றி வேறில்லை. இவ்வாறான வீழ்ச்சிகளை சந்திக்க நேர்ந்த தேசங்களிலெல்லாம் அவ்வாறான சுயபரிசீலனைகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் எங்களது சூழலில் மட்டும் அவ்வாறு நிகழக் கூடாது என்று ஆணையிடுவது எந்த வகையில் சரியானது?

மேலும், புலி ஆதரவு - எதிர்ப்பு என்பதற்கு அப்பால் ஒருவர் ஈழத் தமிழ் மக்களின் நலன் குறித்துச் சிந்திக்க முடியாதா? ஒருவர் புலிகளை விமர்சிப்பதால் அல்லது நிராகரிப்பதால் மட்டுமே, அவர் மக்களின் நலன்களுக்கு விரோதமானவர் என்னும் முடிவுக்கு ஒருவர் வர முடியுமா?

நம்மில் சிலரோ, நமது அரசியல் உரையாடல்கள் அனைத்தும், புலிகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டுமென்று அடம்பிடிக்கின்றனர். இதனை பிறிதொரு வகையில் சொல்வதானால், அவ்வாறானவர்கள் ஈழத் தமிழர் அரசியலை புலிகளுக்கான பக்திவாதமாகச் சுருக்க முயல்கின்றனர். இவ்வாறானவர்கள்தான் கடந்த காலம் குறித்த விமர்சனங்களை எதிர்ப்பவர்களாகவும் அவற்றின் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

தங்களது பக்திவாதம் கேள்விக்குள்ளாகும் போதெல்லாம் இவர்கள் ஆவேசத்துடன் 'துரோகி' - பூமறாங்கை - சுழற்றி வீசுகின்றனர். சிலர் புலிகள் மீது கொண்டுள்ள உண்மையான் விசுவாசத்தின் காரணமாகவும், சிலர் தங்களது சொந்தநலன்களுக்காகவும் இவ்வாறு நடந்து கொள்ளக்கூடும்.

உண்மையான விசுவாசம் கொண்டிருப்பவர்கள், விமர்சன எழுத்துக்களைக் கண்டு அஞ்சுவார்களாயின் அல்லது ஆவேசப்படுவார்களாயின் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல முடியும்-ஈழத் தமிழர் அரசியல் புலிகளைத் தாண்டிச் சென்று விட்டது.

இன்று எந்த நாடு புலிகளை அழித்ததாக சில புலம்பெயர் குழுக்களும், சில உணர்ச்சிவசப்பட்ட தமிழ் தேசியவாதிகளும் கூறி வருகின்றனரோ, அந்த நாட்டின் உதவியைத்தான் த.தே.கூட்டமைப்பு எதிர்பார்த்திருக்கின்றது. எந்த நாடு 1997ஆம் ஆண்டு புலிகளை சர்வதேச பயங்கரவாதிகளாக பிரகடனம் செய்து, ஏனைய நாடுகளையும் அவ்வாறு செய்யும்படி தூண்டியதோ, எந்த நாட்டின் ராஜதந்திரி பிரபாகரனை பின்லேடனோடு ஒப்பிட்டாரோ, அந்த நாட்டின் உதவியைத்தான் இன்று கூட்டமைப்பு எதிர்பார்த்திருக்கின்றது.

எனவே இன்றைய சூழல் என்பது ஈழத் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்க வேண்டிய காலமேயன்றி புலிகளை முதன்மைப்படுத்தி சிந்திக்க வேண்டிய காலமல்ல. 2009 மே.19 உடன் விடுதலைப் புலிகளின் அரசியல் முற்றுப் பெற்றுவிட்டது. அத்துடன் புலிகள் மீதான சிலாகிப்பு அரசியலும் முற்றுப்பெற்று விட்டது.

1949இல் தமிழரசுக் கட்சி அல்லது சமஸ்டிக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்துவைத்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், இவ்வாறு கூறியிருந்தார்: 'ஒருவேளை நாங்கள் எங்களது பயணத்தில் தோல்வி அடைந்தால் எங்களுக்கு அடுத்த தலைமுறை எங்களின் சுலோகங்களை தமது தோள்களில் சுமந்து செல்லும்'.

ஒரு வகையில் தந்தையின் எதிர்பார்ப்பினை அவரது அரசியல் தனயன்கள் இன்றும் செய்து கொண்டுதான் இருக்கின்றனர். இப்போதும் அவர்கள் சுலோகங்களை உயர்த்திக் கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் கடந்த அறுபது வருடங்களாக உயர்த்திப் பிடிக்கப்பட்ட சுலோகத்தினால், ஈழத் தமிழ் மக்கள் அடைந்த நன்மை என்ன? ஏன் அவர்களால் இதுவரை ஒன்றையும் அடைய முடியாமல் போனது? இப்படியொரு கேள்வியைக் கேட்டால் நம்மில் பலரும் என்ன சொல்லக் கூடும்.

நிச்சயமாக சில பதில்கள் கிடைக்கலாம் - மாறி மாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகள் எங்கள் மீது மோசமான ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டன. இந்தியா எங்களுக்கு துரோகமிழைத்து விட்டது. சர்வதேசம் எங்களை கைவிட்டுவிட்டது. இப்படியான உணர்ச்சிநிலை வாதங்களை எல்லாம் ஒரு பக்கமாக மூட்டை கட்டிவைத்துவிட்டு, ஒரு கணம் சிந்திப்போமானால் ஒரு உண்மையில் நாம் அனைவரும் ஒன்றிக்க முடியும்.

இலங்கை அரசின் எதேச்சாதிகாரத்திற்கு எதிராகத்தானே பலரும் போராடப் புறப்பட்டார்கள். எனவே அந்தப் போராட்டத்தை சரியான முறையில் நகர்த்திச் செல்ல வேண்டிய பொறுப்பு யாருக்கானது? இத்தனை அமைப்புக்கள், அவற்றில் இத்தனையாயிரம் உறுப்பினர்கள், அவர்களின் சிலிர்க்க வைக்கும் சாகசங்கள், மக்களுக்காக உயிரை துச்சமாக மதித்த அர்ப்பணிப்பு - இத்தனையிருந்தும் ஏன் அவர்களால் எதையும் சாதிக்க முடியாமல் போனது?

நான் அறிந்தவரை புளொட் அமைப்பில் மட்டும் 85களில் 20,000 போராளிகள் இருந்திருக்கின்றனர். ஏனைய முன்னணி அமைப்புக்களான ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ, ஈரோஸ், விடுதலைப்புலிகள் ஆகியவற்றில் இருந்த போராளிகளையும் கணக்கிட்டால் அன்றைய சூழலில் இலங்கை இராணுவத்தில் இருந்தவர்களை விட மூன்று மடங்கு அதிகமானவர்கள் தமிழ் போராளிகளாக இருந்திருக்கின்றனர். புலிகளின் போராட்டத்தில் மட்டும் மரணித்தவர்கள் 25,000 இற்கும் அதிகமாக இருக்கலாம்.

மக்களுக்கு உப்பரிகைகளை கொடுப்பதற்கான கனவுகளுடன் வந்த, இத்தனையாயிரம் போராளிகளின் தியாகங்களும் ஏன் விழலுக்கு இறைத்த நீரானது? தமிழ்த் தேசிய அரசியலை உணர்ச்சிவாதமாக பார்க்கும் ஒருவர், மாறி மாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகளை நோக்கித் தன் ஆட்காட்டி விரலை நீட்டலாம். மேலோட்டமாகப் பார்த்தால் அது சரியான வாதம் போல் தெரியலாம்.

ஆனால் அறிவு பூர்வமாக சிந்திப்போமாயின் நமது பதில் வேறு விதமாக இருக்க வேண்டும். அரசின் எதேச்சாதிகாரத்திலிருந்து மீண்டெழும் நோக்கில் திரண்டெழுந்த நாம் எமது போராட்டத்தின் வீழ்ச்சிக்கு அல்லது அழிவுக்கு, குறித்த அரசையே காரணம் காட்டுவதில் என்ன தர்க்கம் இருக்க முடியும்.

எனவே அரசை விமர்சிப்பதில் நேரத்தை செலவு செய்வதைவிடுத்து, நமது பக்கத்தை கழுவி சுத்தம் செய்ய வேண்டிய பாரிய பணி நம் முன் உண்டு. நமது கடந்த காலத்தை காய்தல் உவத்தலின்றி பரிசீலிக்க தயாரென்றால் மட்டுமே அது நம்மத்தியில் சாத்தியப்படும். நமது நிகழ்காலத்தின் சவால்களை எதிர்கொள்ள அது ஒன்றுதான் வழியாகும். ஆனால் அரசியலை பக்திவாதமாகச் சுருக்க முயல்வோருக்கு இது எப்போதுமே சங்கடமான ஒன்றுதான்.

இன்று சில உணர்ச்சிவசப்பட்ட தமிழ்த் தேசியவாதிகள் சொல்லி வருவது போன்று, மகிந்த அரசிற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் என்பதெல்லாம், கட்டுரைகளிலும் மேடைகளிலும் குறிப்பிடுவது போன்று அவ்வளவு இலகுவானதல்ல. இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானால் அது ஒரு முயல்கொம்பு போன்றது.கொழும்பின் மீதான சர்வதேச அழுத்தங்கள் என்பவை கொழும்பைத் தண்டிக்கும் நோக்கம் கொண்டவை அல்ல.மாறாக, கொழும்பின் தற்போதைய நிலைப்பாட்டிலிருந்து அதனை சற்று கீழிறக்குவதற்கான முயற்சியாகும்.

இலங்கை லிபியாவோ அல்லது சிரியாவோ அல்ல. இலங்கை உலகம் அங்கீகரித்திருக்கும் தேர்தல் ஜனநாயக முறைமையை மிகவும் சிறப்பாக பின்பற்றும் ஒரு நாடு. இன்றைய மகிந்த அரசு பாரிய மக்கள் செல்வாக்கை கொண்டிருக்கும் அரசு. எனவே இந்த பின்புலத்தில், பத்து வீதமளவிற்கு சுருங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மை தேசிய இனத்திற்காக, சர்வதேசமோ அல்லது இந்தியாவோ மகிந்த அரசை உடனடியாக பகைத்துக் கொள்ளாது.

இதனை ஒரு அமெரிக்க ராஜதந்திரியின் வார்த்தையில் சொல்வதானால் - 'எங்களுக்கு உங்களது உரிமை அல்ல எங்களுடைய நலன்கள்தான் முக்கியம். இங்கு நடந்த, இப்போது நடக்கின்ற விடயங்கள் எவையும் எமக்குத் தெரியாதவை இல்லை. தெரிய வேண்டியவற்றை தெரிந்து கொள்ளும் போது, அந்த நிகழ்வுகளின் விளைவுகள் எமது நாட்டின் நலன்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றி மட்டும்தான் நாம் யோசிப்போம். நீதி நியாயத்தின் மீது அக்கறை இல்லாமல் நாம் இவற்றை உதாசீனம் செய்கிறோம் என்று நீங்கள் கருதக்கூடாது. ஆனால் நாம் எப்போதும் எமது நாட்டின் நலன்களுக்கே முன்னுரிமை கொடுப்போம். அதன் பிறகுதான் மற்றவை எல்லாம். அப்படித்தான் நாம் செய்ய வேண்டியுமுள்ளது.இதில் நீங்கள் கோபிக்க ஏதும் இல்லை.'

உண்மையில் இதுதான் சர்வதேச உறவுகளின் அடிப்படை இலக்கணம். ஆனால் அரச உறவுகள் எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பொறுமையும் நிதானமும் சகிப்புணர்வும் மிக்க சமுதாயம் ஒன்றால்தான் நிகழ்காலத்தில் நிலைகொண்டு எதிர்காலத்தைச் சிந்திக்க முடியும்.

எனவே இந்த இடத்தில்தான் ஈழத் தமிழர் சமூகம் முன்னைய அணுகுமுறையிலிருந்து சற்று மாறுபட்ட வகையில் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டியிருக்கிறது. முன்னர் கௌரவம் என்று கருதிக் கொண்ட நிலைப்பாடுகளை விடுத்து காலத்திற்கு பொருத்தமான நிலைப்பாடுகளை கைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அரசியலை பொறுத்தவரையில் எதிர்ப்பும் தந்திரோபாயமும் எப்போதுமே எதிர்பாற் சொற்கள்தான். தந்திரோபாய அரசியல் என்பது நமக்கு முரண்பாடானவர்களுடனும் ஒன்றிணைந்து அரசியல் செய்வதாகும் என்பதை இந்தக் கட்டுரை அழுத்தம் திருத்தமாக குறித்துக் கொள்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அதிசயமொன்று நிகழ்ந்து, தான் காப்பாற்றப்படலாமென்று எண்ணிக் கொண்டிருந்தது போன்று, இலங்கைக்குள் வாழும் ஈழத் தமிழ் சமூகம் அப்படியாக எண்ணிக் கொண்டிருக்க முடியாது. அப்படியொரு அதிசயம் நிகழுமென்று இப்போதும் சில உணர்ச்சிவசப்பட்ட தமிழ் தேசியவாதிகள் அல்லது அரசியலை ஒரு பக்திவாதமாகச் சுருக்க முயல்வோர் நம்பிக் கொண்டிருக்கலாம். அது அவர்களின் சுதந்திரம் ஆனால் அவர்களுக்காக இந்தக் கட்டுரை மிகவும் வருந்துகிறது.

இன்றைய சூழலை எதிர்கொள்வதற்கான வ்ழிமுறைகளை இலங்கைக்குள்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு அதிக நிதானமும் சகிப்புணர்வுடன் கூடிய அணுகுமுறையும் தேவை ஆகும். நாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை துல்லியமாக மதிப்பிட்டுக் கொண்டால்தான் நம்மால் உடனடியாக என்ன செய்ய முடியும் காலப்போக்கில் என்ன செய்ய முடியும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு பலவீனமானவன் பலசாலியுடன் மோதுவது என்பது நிலத்தில் இருந்து கொண்டு யானையுடன் மோதுவதற்கு ஒப்பான செயல் என்கிறது அர்த்தசாஸ்திரம். இன்றைய சூழலில் ஈழத் தமிழர்களின் நிலைமையும் அத்தகைய ஒன்றுதான். இன்று ஈழத் தமிழர்களுக்கு தேவையானவர்கள் அரசியலை தத்தமது உணர்ச்சிகளுக்கு தீனியாக்கிக் கொள்பவர்கள் அல்ல, மாறாக அரசியல் என்பது நலன்களை கையாளும் கலை என்பதை சொல்லிக் கொடுக்கக் கூடிய அறிவுநிலைப்பட்ட ஆசான்களாகும்.

# பொருளாதார மத்திய நிலையமாக இலங்கையை மாற்றுவதே இலக்கு



(கொழும்பு)

இலங்கை மீண்டும் பிராந்தியத்தின் முக்கிய பொருளாதார மற்றும் வணிக மத்திய நிலையமாக தமது இடத்தை பெற்றுவருகின்றது.

இலங்கை மக்கள் இன்று முன்னோக்கி சென்று, நிரந்தர சமாதானத்த்தை அடைவதற்கும், பொருளாதார சுபீட்சத்தை பெற்றுககொள்ளவும் தயாராக இருக்கிறார்கள்.

ஒரே நாடு என்ற அடிப்படையில் செயற்பட்டால் மாத்திரமே குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

கட்டாரில் ஆரம்பமான டோஹா பொருளாதார மாநாட்டின் 12 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றியபோதே, ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தவும், நல்லிணக்கத்தின் ஊடாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

உணவு தன்னிறைவு என்ற இலக்கை நோக்கி இலங்கை துரித கதியில் முன்னேறி வருகின்றது. வர்த்தக மற்றும் வணிக நட வடிக்கைகளை அடிப்படை யாகக் கொண்டு, பிராந்தியத் தின் பொருளாதார மத்திய நிலையமாக மாறுவதே நாட்டின் சங்கல்பம் என்றார்.

கட்டார் அரச தலைவரான ஹமிர் ஷேக் ஹமாட் கலீபா அல்தானியின் அழைப்பை ஏற்று டோஹா பொருளாதார மாநாட்டில் விசேட விருந்தின ராக ஜனாதிபதி கலந்து கொண்டுள்ளார்.

இம்முறை டோஹா பொருளாதார மாநாட்டில் 84 நாடு கள் மற்றும் அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 600 விருந்தினர்கள் கலந்துகொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலிகளைத் தோற்கடித்தது எப்படி? குஜராத் மாணவர்களுக்கு பாடம்

இலங்கையில் முப்பதாண்டு காலம் போரை நடத்திய விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது எவ்வாறு என்பதனை, இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவரகளுக்கு, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய பாடம் நடத்தவுள்ளார்.

வடோதராவில் உள்ள மகாராஜா சயாஜிராவ் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கே, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய, இந்தப் பாடத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு இவர், தீவிரவாத முறியடிப்பு மற்றும் அனைத்துலக விவகாரங்கள் குறித்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களைக் கற்பிக்கவுள்ளார். இதன்போது, புலிகளைத் தோற்கடித்த தனது அனுபவங்கள் குறித்தே அவர் முக்கிய கவனம் செலுத்துவார்.

மகிந்த பாலசூரிய இந்தப் பல்கலைக்கழகத்தில் 1976ஆம் ஆண்டில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ரஷ்யாவின் சென்.பீற்றர்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான பீடத்தில் கலாநிதிப் பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார்.

கலாநிதிப் பட்டத்துக்காக தான் எழுதிய ஆய்வுக்கட்டு ரையை அடிப்படையாக வைதது, மகிந்த பாலசூரிய "விடுதலைப் புலிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற தலைப்பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 3 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)




காலி - உடுகம பகுதியில் தாய் மற்றும் குழந்தை ஆகியோர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து இலட்சம் ரூபா கப்ப பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் இருவரும் கடத்தப் பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இருபதாயிரம் ரூபா ஒப்பந்தம் ஒன்றுக்காக இந்தக் கடத்தல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடத்தப்பட்டவர்கள் அஹங்கம பகுதியில் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒப்பந்தத்தை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் நபரும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# இரு சவூதி அரேபியர்கள் பாலியல் குற்றச்சாட்டில் கைது

(கொழும்பு)

பெண்களை விபசார நடவடிக்கைகளுக்கு வழங்கிய மற்றும் 17 வயதான பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஹிக்கடுவையிலுள்ள ஹோட்டலொன்றிலிருந்து இரு சவூதி அரேபியப் பிரஜைகளும் ஒரு இலங்கைப் பிரஜையும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்றையதினம் காலி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மரணப் படுக்கையில் உள்ள தாயைப்பார்க்க
# டுபாயில் உள்ள இலங்கைப் பெண் உதவி வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தமக்கு, மரணப்படுக்கையில் உள்ள 90 வயதான தமது தாயை பார்ப்பதற்கு உதவியளிக்க வேண்டும் என்று தீபாயில் உள்ள இலங்கை பெண் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்ப் நியூஸ் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

துபாயில் சாரதி பயிற்சிக் கல்லூரியில் பயிற்றுநராக பணிபுரியும் ஹபீபா பிபி என்ற என்ற இந்த இலங்கைப்பெண் புற்றுநோயின் மூன்றாவது கட்டத்தில் உள்ளார். எனவே 60 வயதான அவர், தாம் இறப்பதற்கு முன்னர் தமது தாயை பார்த்து விட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

தாம் பணியாற்றி வரும் துபாயின் சாரதி பயிற்சிக்கல்லூரியில் தமக்கு ஒரு இலட்சம் டோஹார் பணம் கடன் உள்ளது. இந்த நிலையில் அதனை தீர்த்தால் மாத்திரமே தம்மால் இலங்கைக்கு சென்று தாயை சந்திக்க முடியும்.

எனினும் தமது வருத்தத்துக்கு பணத்தை செலவழிக்கவோ அல்லது தாயை சென்று பார்க்கவோ முடியாத நிலையில் உள்ளதாக பீபீ குறிப்பிட்டுள்ளார். எனவே பொதுமக்கள் தமக்கு நிதியுதவி புரியவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

# 9 வயதுச் சிறுவனை காணவில்லை

(கொழும்பு)

தலவாக்கலை கூம்வூட் தோட்டத்தைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுவனொருவன் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியிலிருந்து காணாமல் போயுள்ளதாக தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைபபாடு செய்துள்ளனர்.

இச்சிறுவன் தலவாக்கலை நகரிலுள்ள பிரத்தியேக வகுப்புக்குச் சென்றபோதே காணாமல் போனதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை, லிந்துலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சிறுவனின் புத்தகப் பையும் பாதணிகளும் மேல் கொத்மலை நீரணைக்கு அருகில் காணப்படுவதை பிரதேச மக்கள் நேற்று திங்கட் கிழமை காலை கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையில், நீரணையில் இச்சிறுவன் விழுந்திருக்கலாமென்ற சந்தேகத்தில் நீரணையில் இச்சிறுவனை தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

# தமக்கு பிரதியமைச்சு பதவி வேண்டாம்

## நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)


தமக்கு பிரதியமைச் சர் பதவி வேணடாம் என்று தமது தந்தையான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கூறிவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள செய்திதாள் ஒன்றுக்கு கருத்துரைத்த அவர், அமைச்சு பதவிகளை கொண்டு இதுவரை தாம் மக்களுக்கு சேவைகளை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்தநிலையில் கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாடு திரும்பியதும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.திகாம்பரம், பிரபா கணேசன் உட்பட்ட பலருக்கு பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)




இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் புத்தளத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - முள்ளிபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 87 கஞ்சா பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.சந்தேகநபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# திருட்டு வங்கி அட்டை பணமோசடி

(கொழும்பு)

வாடிக்கையாளர் ஒருவரால் வங்கியில் தவறவிடப்பட்ட கடன் அட்டையை பயன்படுத்தி பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.எம்.என்.ப.அமரசிங்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் மூவரும் நீர்கொழும்பு - போலவலான பிரதேசத்தை சேர்ந்த ஒருவரின் வங்கி அட்டையை பயன்படுத்தி பல இலட்சம் ரூபா பணத்தை மோசடியாகப் பெற்றுள்ளனர்.

வழக்கின் முறைப்பாட்டாளர் கடந்த 9ஆம் திகதி நீர்கொழும்பில் உள்ள தனியார் வங்கியொன்றின் தன்னியக்க இயந்திரத்தில் பணத..நப் பெற்றுக்கொண்டு செல்லும் போது அவரது வங்கி அட்டையையும் வங்கி அட்டையின் இரகசிய குறியீடு எழுதப்பட்ட காகிதத்தையும் தவறவிட்டுள்ளார்.

இதனை சந்தேகநபர்களில் இருவர் கண்டுள்ளதோடு வங்கி அட்டையை பயன்படுத்தி 80000 ரூபா பணத்தை முதலில் பெற்றுள்ளனர். பின்னர் மூன்றாவது சந்தேக நபரான மஹவெள பிரதேசத்தை சேர்ந்த பெண்ணுடன் இணைந்து 375,000 ரூபா பணத்தை பெற்று மூவருமாக பணத்தை பகிர்ந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் முறைப்பாட்டாளர் சில தினங்கள கடந்து தனது வங்கி அட்டை காணாமல் போனத்தை அறிந்து கொண்டதன் பின்னர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து வங்கியின் இரகசிய கமராவை பரிசோதித்த பொலிஸார் நகரில் உளள கடைகளில் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

# பிலியந்தலையில் ஆயுதங்கள் மீட்பு


(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிலியந்தல - பன்சல வீதி பகுதயில் இநத வீடு அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரி - 56 ரக துப்பாக்கிகளுக்கான ரவைகள், ஒன்பது மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள், துப்பாக்கிகள், குண்டுகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களும் வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் வசித்து வரும் நபர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் இது வரையில் கைது செய்யப்படவில்லை.




# சினிமா மூலம் சிங்களம்

இன்றைய தின தமிழ் அரச ஊழியர்களுக்கு உள்ள சவால் சிங்களம் கற்பதாகும். அவர்களது வேதன ஏற்றத்திற்கும் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கும் சிங்களமொழி அத்தியாவசியமாகும்.

ஒரு மொழியை கற்றுக் கொள்வது என்பது கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பது போல அன்று.

ஆண்டு1 இருந்து ஆண்டு 11 வரை ஆங்கிலம் கற்றும் பின்னும் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மூலம் கற்றும் ஆங்கிலத்தில் ஒரு கடிதம் கூட எழுதத் தெரியாதவர்கள் இங்கு பலர் உள்ளனர்.

மொழியை புத்தகத்தில் மட்டும் படித்ததே இதற்கு காரணமாகும். இன்றைய பல்லூடக தொழிநுட்பத்தில் கட்புல செவிப்புல சாதனங்களூடாகவும் குழுச்செயற்பாடுகள் ஊடாகவும் மொழியை கற்பிப்பதே காத்திரமான வழிமுறையாகும்.

இந்த வகையில் சிங்களத்தை இலகுவாக கற்றுக்கொள்வதற்கு சிங்கள சினிமாக்களையும் சிங்கள தொலைக்காட்சி நாடகங்களை பார்ப்பதும் பயனள்ளதாகும். அந்த வகையில் ஒரு சிங்கள திரைப்படம் பற்றிய அறிமுகம் இது.

கொலம்ப சன்னிய - மிகவும் நகைச்சுவையான ஒரு சிங்களத் திரைப்படம். எழுபதுகளில் வெளிவந் திருக்கலாம் என நினைக்கிறேன். மனிக் சந்திர்சேகர என்பவர் இயக்கிய கறுப்பு வெள்ளைப் படம்.

இலங்கையிலுள்ள குக்கிராமம் ஒன்றில் இயற்கை கடன் கழிக்கவென செல்லும் அந்தரே என்பவ்ரிற்கு மிகவும் பெறுமதியான இரத்தினக்கல் ஒன்று கிடைக்கின்றது. அதை விற்று திடீர் பணக்காரராகும் அந்தரேயும் அவரது குடும்பத்தினரும் கொழும்பில் செல்வந்தர்கள் வசிக்கும் பகுதியொன்றில் வீடு வாங்கி அங்கு பண்ணும் ரகளைகளே படத்தின் சாராம்சம்.




இந்திய சினிமாவின் சாயலில் தற்போது வெளிவந்து ரசிகர்களின் பொறுமையைச் சீண்டும் சிங்களத் திரைப்படங்களிற்கு இதுவொரு விதிவிலக்கு. அந்தக் காலத்திலேயே சிறந்த திரைக்கதை, எடிட்டிங், ஒளிப்பதிவு என எதிலும் சோடை போகாத மிகவும் ரசிக்கும் படியான ஒரு நகைச்சுவைத் திரைப்படத்தை அளித்த இயக்குனர் மனிக் சந்திரசேகரவை அவசியம் பாராட்ட வேண்டும்.

இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திடம் சுமார் ஒரு கோடி ரூபாவிற்கு அந்த இரத்தினத்தை விற்று. அவர்கள் தந்த காசோலையை "உந்த கடதாசி எனக்கு வேண்டாம்' என்று தொகையை பணமாகவே பெற்று பணத்தை தலையணை உறையொன்றுக்குள் வாங்கிக்கொண்ட அந்தரே, தனது மகன், மகள், வயதான சகோதரி (கிழவி) மற்றும் தனது நெருங்கிய உறவினர் யாக்கோலிஸ் சகிதம் வெள்ளைக்காரர்கள் வசிக்கும் பகுதியொன்றில் குடியேறுகிறார்.

அந்த ஆடம்பரவீட்டில் மலசலகூட கொமெட்டில் உடுப்பு தோய்க்க முயற்சிப்பதிலிருந்து ரகளை ஆரம்பமாகிறது. அதன் பின்னர் ஒரே சிரிப்புத்தான். 'வரில் குளித்து அலுத்துப்போய் கிராமத்தில் கிணற்றில் குளிக்கும் அனுபவத்தைப்பெற கிணறு ஒன்றை தோண்டுகின்றனர். யாக்கோலிஸ் அதற்கு நாளும் இடமும் பார்த்துச்சொல்ல குறிப்பிட்ட சுபநாளில் கிணறு தோண்டப்படுகின்றது. சில அடிகள் தோண்டியதுமே தண்ணீர் பீரிட்டுக்கொண்டு வர எல்லோரும் மகிழ்ச்சியில் ஆரவாரித்து யாக்கோலிஸை பாராட்டுகிறார்கள். பக்கத்து வீட்டில் 'வரில் குளித்துக் கொண்டிருந்த வெள்ளைக்காரர் ஒருவர் திடீரென்று தண்ணீர் வராமல் போவே வெளியில் வந்து பார்த்து தலையிலடித்துக் கொள்கிறார். இவர்கள் கிணறு வெட்டியது அவர்களின் பைப் லைனில்...!!

கொழும்பு நாகரிகம் மற்றும் ஆங்கிலம் என்பவற்றை மகளுக்குப் போதிப்பதற்காக வாத்தியார் ஒரு வரை ஒழுங்கு செய்கிறார் ஆச்சி. வாத்தியார் முதல் பாடமாக நேர் கோடு ஒன்று கீறி தலையில் புத்தகத்தை விழாமல் வைத்தவாறு ஆச்சிக்கும் மகளுக்கும் பூனை நடை (cat walk) பயிற்றுவிக்கிறார்.

இவ்வாண்டு நடக்கும் ஒலிம்பிக்போட்டி ஆயத்தங்கள்




தொடர்பான விவரண நிகழ்ச்சி ஒன்றில் கொரிய MBC ஒளிபரப்புச்சேவை மேற்படி நிகழ்வை ஒத்த ஒன்றையும் ஒளிபரப்பியது. வெற்றிப் பதக்கங்களை தட்டுக்களில் ஏந்தியவாறு அழகிகள் வெற்றிப்பீடத்தை நோக்கி நளினமாக நடந்து செல்வதற்கு அவர்களின் தலையில் புத்தகம் ஒன்றை வைத்து மூவரையும் ஒரே மாதிரி புன்னகைக்க வைத்து நடை பழக்கினார்கள்!!

Coming மற்றும் Sweet என்ற இரண்டு வார்த்தைகளை மட்டும் கற்றுக்கொண்டு அந்தரேயும் யாக்கோலிஸூம் சமாளிப்பது மிகுந்த வேடிக்கை. மகளிற்கு மணமகன் தேடுவதற்காக விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்கிறார் அந்தரே. அந்த விருந்துக்கு முக்கிய பிரமுகர்கள் பலரும் அழைக்கப்படுகின்றனர். குமார் பொன்னம்பலமும் மனைவியும் கூட இவ்விருந்துக் காட்சியில்



தோன்றுகிறார்கள். விருந்தில் மகள் கற்றுக்கொண்ட ஆங்கிலத்தை தப்பு தப்பாக பிரயோகிப்பது அந்தரேயும் யாக்கோலிஸூம் Coming, Sweet ஐ மட்டுமே வைத்துக்கொண்டு சமாளிப்பது படுஜோர்.

விருந்தில் வெள்ளையரையும் கறுப்பரையும் கண்டு வெறுத்துப்போன அந்தரே தமது கிராமத்தை சேர்ந்த உறவுப்பையன் ஒருவனுக்கே மகளை மணமுடிக்க தீர்மானிக்கிறார். ஆனால் நாகரிக மோகமும் அந்தஸ்து மோகமும் கொண்ட தமக்கையாரை ஏமாற்றி எப்படி அக்கல்யாணத்தை நடத்தி வைக்கிறார் என்பதே க்ளைமாக்ஸ்.

ஜோய் அபேவிக்ரம அபாரமான நடிகர். தனது கிராமியப் பாத்திரத்தை உணர்ந்து அபாரமாக நடித்திருக்கிறார். மற்றைய நடிக நடிகையரும் மிக இயல்பாக பாத்திரத்துடன் ஒன்றிப்போய் நடித்திருக்கின்றனர்.

சிங்கள திரைப்பட உலகில் ஜக்சன் அன்ரனியும் புகழ்பெற்றவர். இவர் நடித்த படங்கள் பெரும்பாலும் கதையம்சம் மிக்க தரமான படங்களாகவிருக்கும். நான் பார்த்த சிங்களப் படங்களுள் அக்னிதாஹய, சூர்ய அரண, மில்லசொயா, ஆதரணிய வசும என்பன பாசாங்கற்ற தரமான படங்கள். இவை இந்திய ஹீரோயிஸ படங்களிலிருந்து மாறுபட்டவை. தென்இந்திய, ஹிந்தி திரைப்படப் பாணிகளை தழுவியதாக தத்தக்கா பித்தக்கா என எடுக்கும் சிங்களப் படங்களை பார்ப்பதற்கு பதிலாக ரீ.வி சீரியலுக்கு முன் உட்கார்ந்து அழுது கொண்டிருப்பது எவ்வளவோ மேல்.

சிங்கள தொலைக்காட்சித் தொடர்களும் யதார்த்தமான கதையமைப்பைக் கொண்டவை. சமையலறையிலும் கூட கூறைப்புடைவையில் நிற்காமல் யதார்த்தமான பாத்திரப் படைப்புகளைக் கொண்டவை. கிரஹணய, அசல கலவர, ஹிருட்ட முவாம்ன் போன்றவை சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான தொலைக்காட்சித் தொடர்களாகும்.

## ஆரோக்கிய விஷம்!



ஈரானில் நீண்ட காலமாக மக்கள் ஆவலோடு படித்து வரும் ஒரு மகா காவியக் கதை இது:

மிகப் பழங்காலத்தில், உலகம் மிகவும் சிறியதாக இருந்தது. பாரதம், சீனம், எகிப்து, ஈரான் ஆகிய நாடுகளே அப்பொழுது இருந்தன.

ஈரானிய அரசர் உல்லாசக்காரர். வெளிநாட்டுப் புலவர்களையும், கலைஞர்களையும் வரவேற்று, அவர் விருந்து அளிப்பார். பின், பழங்கள் வழங்குவார். குளிர்ந்த பானங்களை அருந்தக் கொடுப்பார். அழகிய நாட்டிய மங்கைகள், நடனம் ஆடி விருந்தினரை மகிழ்விப்பர்.

விருந்து முடிந்ததும், மிச்சமிருக்கும் பழங்களை, ஒரு கிழவன் எடுத்துப் போவான். ஆனால், விருந்துகள் அதிகமாகவே மீறும் பழங்களை, அவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. கூடத்தில் ஒரு புறத்தில் மறைவாக இருந்த பெரிய சீன ஜாடிகளில், மிச்சமான பழங்களைப் போட்டு வந்தான்! ஒருநாள் இறந்து விட்டான் அந்த வயதான கிழவன்.

பல நாட்களுக்குப் பின், இரவில் அரசருக்கு தூக்கமே வரவில்லை... சாளரங்களின் வழியாக வீசிய மலர் மணத்துடன், ஏதோ நெடியும் வந்தது. அது அவர் மூளையைக் கிறங்கச் செய்தது. அது என்ன என்று பணியாளர்களைக் கண்டுபிடிக்கச் சொன்னார்.

அவர்கள் இங்குமங்கும் ஓடி, சீன ஜாடிகளிலிருந்து நாற்றம் வீசுவதைத் தெரிவித்தனர். அது ஏதோ விஷமாக இருக்க வேண்டும் என்று கருதிய அரசர், சிவப்பு எழுத்தில், அந்த ஜாடிகளின் மேல், "விஷம்" என்று எழுதி வைத்தார். தமக்கு வேண்டாதவர்களுக்கு அதை கொடுக்கலாம் என்றும் எண்ணினார்.

ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டு, நாளுக்கு நாள் இளைத்து வந்தாள் ஒரு நாட்டிய மங்கை. அவளைச் சீந்தவில்லை அரசர். வாழ்வில் வெறுப்புற்று, ஒரு நாள் அந்த ஜாடியிலிருந்து ஒரு கோப்பை திரவத்தைக் குடித்த அவள், மறுநாள் காலையில் தெம்புடன் விழித்தெழுந்தாள்.

ஒருவருக்கும் தெரியாமல் அவள் 'அதைத் தொடர்ந்து குடித்து, உடல்நலம் பெற்று, மீண்டும் நாட்டியமாடினாள்.

அவளுடைய ஆரோக்கிய ரகசியத்தைப் பற்றி அரசர் கேட்ட போது, அவள் அந்த விஷ ஜாடியைச் சுட்டிக் காட்டினாள்.

அதில் ஒரு துளியை அரசர் அருந்தினார். மேலும், குடிக்க வேண்டும்போல் இருந்தது, குடித்தார். வெறி உண்டாயிற்று, அன்றே மது பிறந்தது!

## சினிமா சினிமா




ஸ்ரீதேவியை எனக்கு ரொம்ப பிடிக்கும், ஆனால் திருமண விஷயத்தில் மட்டும் அவர் வழியை பின்பற்ற மாட்டேன்" என்கிறார் நடிகை சமந்தா. பாணா காத்தாடி, மாஸ்கோவின் காவிரி போன்ற படங்களில் நடித்தவர் சமந்தா. தெலுங்கில் முன்னணி கதாநாயகிகளில் ஒருவர். இவர் நடித்துள்ள "நான் ஈ" படம் இம்மாதம் வெளியாகிறது. இதுதவிர மணிரத்னத்தின் "கடல்", கவுதம் மேனின் "நீதானே என் பொன்வசந்தம்" போன்ற படங்களிலும் நடித்து வருகிறார்.

சினிமாவில் ஸ்ரீதேவி தான் என்னுடைய ரோல் மொடல். குழந்தை நட்சத்திரமாக அறிமுக மாகி தமிழ், தெலுங்கு, இந்தி என்று எல்லா மொழிகளிலும் வெற்றிக்கொடி நாட்டி யவர். திருமண விஷயத்தில் மட்டும் நான் அவரை பின்பற்ற மாட்டேன். அதாவது ஏ னவே திருமணமானவரை திருமணம் செ மாட்டேன் என்றார், விவரமான சமந்தா!

அமளி துமளி, தப்புத் தாளங்கள், குண்டலோ கோதாவரி என்று பல படங்களி



பிஸியாக இருக்கும் நடிகை சுஜா வாருன இப்போது ஆர்யா நடித்து வரும் சேட்டை படத்தில் ஒரு நடிகையாகவே நடித்து வரு றார். ஜெயங்கொண்டான், வந்தான் வென்ற படங்களின் இயக்குநர் கண்ணன், ஹிந்தியி வெளியாகி சக்கைபோடு போட்ட "டில்லி பெல்லி" படத்தின் தமிழ் பதிப்பை இயக்



சந்திரன் நோக்கிய பயணச் சாதனைகள் தொடங்கி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகின்றன. அப்போலோ பயண சாதனைகளுக்குப் பிறகு ஏறத்தாழ 20 ஆண்டுகள் கழித்து, 1992 டிசம்பர் 7 அன்று சந்திரனை உற்று நோக்கிய கலிலியோ எனும் அமெரிக்க விண்கலம் சந்திர வட துருவம் அருகே நிலாப் பள்ளங்களில் நிரந்தரப் பனிக்கட்டி படிந்திருப்பதனை அறிவித்தது.

தொடர்ந்து 1994 பெப்ரவரி - மார்ச் மாதங்களில் அமெரிக்காவின் "கிளமென்டைன்" (Clementine) எனும் ஆய்வுக் கலம் சந்திரனின் தென் துருவத்தில் தண்ணீர்ப் பனிக்கட்டிகள் உறைந்திருப்பதாகத் தெரிவித்தது. நிலாவின் வட கோளத்தில் 10,000 முதல் 50,000 சதுர கிலோமீற்றர் பரப்பிலும், தென் பகுதியில் 5000 முதல் 20,000 சதுர கிலோ மீற்றர்கள் அளவிலும் ஏறத்தாழ 30 கோடி டன்கள் தண்ணீர் ஒளிந்திருப்பது நிச்சயம்.


இது ஏற்கனவே அறிவித்ததை விட ஏறத்தாழ 20 மடங்கு அதாவது 600 கோடி டன்கள், ஏறத்தாழ 30 கோடி பவுசர்கள் தண்ணீர் என்றால் சும்மாவா? இதையே வேறு விதமாகச் சொன்னால் சந்திர நிலத்தடி நீரின் அளவு இந்துமாக் கடலின் தண்ணீர் அளவில் ஒரு கோடியில் ஒரு பங்கு. விண்வெளி நாடுகள் யாவுமே நிலாத் தண்ணீரைக் குறிவைக்கின்றன.

நிலாப் பயணங்கள் மேற்கொண்ட நாடுகளின் வரிசையில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பிறகு இன்று ஐரோப்பாவும், ஜப்பானும், சீனாவும் சேர்ந்து கொண்டன. அதற்கு அடுத்து ஆறாம் இடம் இந்தியாவிற்கு.

இந்தியாவின் சந்திரயான் விண்கலம் சென்று ஆராய்ந்ததிலும், சந்திரனில் செறிந்து உள்ள ஹைட்ரொக்சில் நீர்க்கூறு அம்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் புதிய கண்டுபிடிப்பு.

2009 ஆகஸ்டில், வடதுருவப் பனி அளவை ஆராய்வதற்கு அனுப்பப்பட்ட கலத்தில், நாசாவின் சிறு வானலை அதிர்வுஏற்பி

# சுருங்கி வரும் நிலா



(Miniature Radio Frequency), அங்கு துருவப் பகுதிகளில் பனி உறைந்து இருந்ததைக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது.

அதே ஆண்டு செப்டம்பரில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம், அமெரிக்காவின் நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கழக அறிவியலறிஞர்கள் கூடி அலசி ஆராய்ந்தனர். அதன்படி நிலாத்தண்ணீர் உறுதி செய்யப்பட்டுவிட்டது. அது குடிக்கிற மாதிரி திரவ நீர் அல்ல. பனிக்கட்டிகளும் அல்ல. மண் படிகங்களிலும், மணலிலும் பிணைந்து உள்ள நீர்க்கூறுகள் அவ்வளவே.

இதற்கிடையில் நிலாப் பாறைகளில் ஒட்சிகரணப்படுத்தப்பட்ட உலோகத் தாதுக்கள் உள்ளன என்பதால், அவற்றில் இருந்து சுவாசிக்க ஒட்சிசனைப் பிரித்து எடுக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர். இத்தனைக்கும் மத்தியில், சந்திரனின் சுற்று வட்டமும் ஆண்டு தோறும் 4 செ.மீ. வீதம் விரிவடைந்து வருகிறது என்பது அதிர்ச்சித் தகவல்.

அது நம்மில் இருந்து மெல்ல மெல்ல விலகி வருகிறதாம். 2004ஆம் ஆண்டு ஆய்வுப்படி புவிக்கும், சூரியனுக்கும் இடையிலான தூரம் கூட ஒவ்வோர் ஆண்டும் 15 செ.மீ. வீதம் அதிகரித்து வருகிறதாம்.

நிலாத் தண்ணீர் மனதுக்குக் குளிர்ச்சி. விலகும் சந்திரன் சந்திரனுக்கே குளிர்ச்சி தரும். இந்த நிலையில் சந்திரன் குறித்து இன்று புரியதோர் தகவல் அறியப்பட்டுள்ளது. அதாவது, சந்திரனின் பருவ ஆண்டுக்கு, ஆண்டு குறைந்து வருகிறதாம். நிலாக் கண்காணிப்புச் சுற்று கலன் பார்வையில் நிலாவின் தரைப்பரப்பில் பல்வேறு விரிசல்கள் (Lobate Scarps) பதிவாகி உள்ளன - நிலா முகத்தில் வயதான சுருக்க ரேகைகள் மாதிரி.

கடந்த 100 கோடி ஆண்டுகளுக்குள் 100 மீற்றர்கள் அளவு சுருங்கி விட்டது என்கிறார்கள். அதாவது ஒவ்வொரு நூற்றாண்டும் நம் நிலா 10 மைக்ரோன் அளவு மெலிந்து வருகிறது. சராசரி தலைமுடி அளவில் பத்தில் ஒரு பங்கு. இதற்குப் போய்ப் பயப்படுவானேன் என்கிறீர்கள்?

ஆனாலும் நம் நிலா சும்மா அழகுப் பதுமையாய்ச் சுற்றிவராமல் புவி வரலாற்றியல் அடிப்படையில் சதா இயங்கிக்கொண்டு இருக்கிறது என்பதுதான் இன்றைய புதிய தகவல்.

# அவுஸ்திரேலியா சென்ற ஒரு இந்தியர் சொல்வது

அவுஸ்திரேலியர்கள் பெரும்பாலும் மனோதத்துவம் படிப்பதில்லை. அதனால், அங்கு இந்திய மனோதத்துவ டாக்டர்களே அதிகம். நான் அங்கு சென்ற புதிதில், அங்குள்ள பிரபல நாளிதழில், "இந்திய டாக்டர்கள் வசம், அவுஸ்திரேலிய மருத்துவத்துறை தஞ்சமடைகிறதா?" என தலைப்பிட்டு பெரிய கட்டுரை எழுதியிருந்தனர். அதைப் படித்த எனக்கு வயிற்றை கலக்கி விட்டது... எங்கே நம் வேலைக்கு உலை வைத்து விடுவரோ என்று! மற்றபடி, உடன் பணியாற்றும் அவுஸ்திரேலிய டாக்டர்கள் எவரும் நிற வேற்றுமை எல்லாம் பார்ப்பதில்லை, நட்புடனேயே பழகுகின்றனர்.

மாதம் இரண்டு இலட்ச ரூபா (இந்திய மதிப்பில்) சம்பளம்... இதில் கொடுமை என்னவென்றால், 48 சதவீதம் வருமான வரி. அதாவது, 90 ஆயிரம் ரூபா வரியாகப் போய் விடுகிறது. அவுஸ்திரேலிய குடிமகன்களுக்கு, 45 சதவீத வரி விதிக்கின்றனர். இன்னும் ஆறு மாதம் வேலை பார்த்து விட்டேன் என்றால், சம்பளம் 50 சதவீதம் கூடும்!

இங்கு சமூக நல அமைப்பு அருமையாக உள்ளது. எதற்கெடுத்தாலும் உதவித் தொகை தருகின்றனர். உதாரணத்திற்கு சொல்லப் போனால், அவுஸ்திரேலியாவின் வெள்ளைத் தோல் ஜனத்தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 50-60 ஆண்டுகளுக்கு முன், இத்தாலி, கிரீஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், சீனாவிலிருந்தும் வந்த மக்களுக்கு, பல சலுகைகள் அளித்து குடியமர்த்தியுள்ளனர்.

அவர்களின் சந்ததியர் ஆங்கிலம் பேசுகின்றனரே தவிர, முதலில் குடியேறியவர்களுக்கு, இன்னும் கூட ஆங்கிலம் பேசத் தெரியாது, புரியாது. இவர்கள் உடல் நலமின்றி ஆஸ்பத்திரிகளுக்கு வரும் போது, மொழி பெயர்ப்பாளரை உதவிக்கு வைத்துக் கொள்ளலாம். இதற்கென மொழி பெயர்ப்பாளர் பலர் உள்ளனர். அவர்களுக்கு ஒரு மணி நேர கட்டணம், 2,000 ரூபா. இந்தக் கட்டணத்தை அரசே கொடுத்து விடும். இந்த மொழி பெயர்ப்பாளர்கள், ஒரு நாளில், இது போல குறைந்தபட்சம், ஐந்து மணி நேரம் வேலை செய்கின்றனர்.

அடுத்து கல்வி... அவுஸ்திரேலிய இளைஞர்கள், பள்ளிக்கூடக் கல்வியைத் தாண்டுவதில்லை... உயர் படிப்பு படித்தவர்களுக்கு ஈடாக, ஏன் அவர்களை விட அதிகமாகவே சில வேலை களில் சம்பாதிக்கின்றனர். உதாரணமாக, "பிரிக்லேயர்" எனப்படும் மேசன்மார்கள்.

இவர்கள் வேலைக்கு எக்கச்சக்க வருமானம் கிடைக்கிறது. அவுஸ்திரேலியாவிலேயே மிக அதிக விலை உடைய கார்கள் இவர்களிடம்தான் உள்ளன. எனவே, பல இளைஞர்கள் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும்; இதுபோன்ற மேசன்களிடம் பயிற்சியாளர்களாக சேர்ந்து விடுகின்றனர்.

குறிப்பிட்ட காலம் பயிற்சி எடுத்தபின், பயிற்சி தந்த மேசன் ஒரு சான்றிதழ் கொடுப்பார். அதன்பின் தனியாக பணியாற்றலாம் அவ்விளைஞர்கள்.



சான்றிதழ் இல்லாமல், அந்நாட்டில் இது போன்றோர் பணியாற்ற முடியாது! நம் நாட்டில் எலக்ட்ரீஷியன்கள், பிளம்பிங் வேலையும் செய்வர், சில, பல மெக்கானிக்கல் வேலையும் செய்வர் அல்லவா? அங்கே அது முடியாது! அந்தந்த வேலையை அது, அதற்கு தகுதி பெற்றவர் தான் செய்ய முடியும்!

போதை மருந்து எடுத்துக் கொள்ளும் மோசமான செயல், அந்நாட்டு இளைஞர்களிடையே வேகமாக பரவி வருகிறது... ஹெரோயின், கஞ்சா, இன்னும் பல வகையான போதைப் பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

இவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை... வைத்திருந்தாலே கடுமையான சிறைத் தண்டனை உண்டு என்றாலும், பொலிஸாரால் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை!

அரசாங்கம், ஏகப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், வஞ்சமில்லாத ஆட்சி என்பவற்றை வழங்குகிறது. ஆனால், அவற்றை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளத்தான் மக்களுக்குத் தெரியவில்லை.....!

வருகிறார். ஹீரோவாக ஆர்யாவும், ஹீரோயினாக ஹன்சிகா மற்றும் அஞ்சலியும் நடிக்கின்றனர். இவர்களுடன் சந்தானமும் நடிக்கிறார். இந்தப் படத்தில் ஒரு நடிகையாகவே நடிக்கிறார் சுஜா வாருனீ. படத்தில் உடன் நடித்த அனைவரும் சுஜா வாருனீயின் நடிப்பை மிகவும் பாராட்டினராம். குறிப்பாக, சுஜா வாருனீ எல்லா பாத்திரங்களிலும் மின்னத் தகுதியான நடிகை என நடிகர் ஆர்யாவும், சந்தானமும் எல்லோர் முன்னிலையிலும் பாராட்டியது தனது கண்ணில் நீரை வரவைத்தது என்கிறார் சுஜா வாருனீ. வேட்டைக்காரரின் சேட்டை!

➧ அரசியல் மாற்றத்துக்குப் பின் அடங்கியிருக்கும் வடிவேலு, மீண்டும் கதாநாயகனாக நடிக்க வருகிறார். ஏற்கனவே



அவரை வைத்து, "இம்சை அரசன் 23ஆம் புலிகேசி" படத்தை இயக்கிய சிம்புதேவனே, அப்படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்குகிறார். அதில், அதிரடி காமெடி நாயகனாக, தன் அடுத்த பிரவேசத்தை துவங்குகிறார் வடிவேலு. அம்மா காலில் விழுந்தாச்சா?



➧ அசின், இலியானா, டாப்சி, காஜல் அகர்வாலை தொடர்ந்து, ஹிந்திப் படங்களில் நடிக்க, பல தென்னிந்திய நடிகைகள் முயற்சித்து வருகின்றனர். அதில் தமன்னாவின் முயற்சிக்கு, தற்போது பலன் கிடைத்துள்ளது. அஜய் தேவ்கான் நடிக்கும் ஒரு படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். அதோடு, பொலிவுட் நடிகைகள் அளவுக்கு, படு கவர்ச்சியாக நடிக்கவும், ஓ.கே. சொல்லியிருக்கிறார். வந்ததை வரப்படுத்தடா வலக்காட்டு ராமா!

➧ சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாறை மையப் படுத்தி, "த டேர்ட்டி பிக்சர்ஸ்" படம் பெருவெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மும்பை தொடர்மாடி ஒன்றில் இருந்து, விழுந்து மறைந்த திவ்யா பாரதியின் வாழ்க்கையை மையமாக வைத்தும், இப்போது ஒரு படம் தயாராகிறது. இதில் நடிக்க, அசப்பில் திவ்யாவைப் போலவே இருக்கும் ரம்பாவை அணுகினர். ஆனால், திருமணத்துக்குப் பின், பெரிய அளவில் அவர் உடல் பெருத்து விட்டதால், வேறு நடிகையை தேடி



வருகின்றனர். கிடக்கிறது எல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மணையில் வைத்த கதை!

# மாகாண சபைத் தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(யாழ். நிருபர்)

மாகாணசபைத் தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டுமென பெபரல் என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கட்டம் கட்டமாக தேர்தல் நடத்தப்படுவதனை தமது அமைப்ப எதிர்ப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாகாணசபையாக தேர்தல்களை நடாத்தாது எட்டு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை' ஒரே நாளில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2013 ஆம் ஆண்டில் ஒரே நாளில் நாட்டின் அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை நடாத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்டம் கட்டமாக தேர்தல் நடத்துவதனால் பொதுமக்கள் பணம் பாரியளவில் விரயமாகின்றது.

மேலும், இவ்வாறு தேர்தல்களை நடத்துவதன் மூலம் மக்களின் உண்மையான விருப்பத்தைத் தெரிந்து கொள்ள முடியாது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்பினர் கூடுதல் நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தேர்தல் நடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொன்சேகாவின் சிவில் உரிமைகள் முடக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகள் முடக்கப்பட மாட்டாது என சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு நிபந்தனை அற்ற அடிப்படையிலான பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவே தமக்கு தகவல் கிடைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்காது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சரத் பொன்சேகா விடுதலைப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளார். அரசியல் சாசனத்தின் 34 ஆம் சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது குறித்த ஆவணங்களில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார் என்றார்.

# அரசியல் தீர்வு முனைப்புக்களை காலம் தாழ்த்துவது நல்லதல்ல

(யாழ். நிருபர்)

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு அறிக்கையில் சில ஆக்கபூர்வமான பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்ப்பில் சில காத்திரமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கின் சில பகுதிகளில் படையினர் முஸ்லிம், மக்களை வெளியேற்றி முகாம்களை அமைத்துக் கொண்டுள்ளன.

இந்த விடயம் குறித்து மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளான முஸ்லிம் மக்கள் இன்னமும் மீள் குடியேற்றப்படவில்லை எனவும், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படவில்லை.

அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது தொடர்பான முனைப்புக்களை காலம் தாழ்த்துவது ஆரோக்கியமான நடவடிக்கையாக அமையாது.

யுத்தம் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் மிகவும் சொற்பளவு தீர்வுகளே முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த விரைவுப் பேருந்து ஒன்று கிளிநொச்சி நகரில் நடுவீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. கிளிநொச்சி நகரின் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் புனரமைக்கப்பட்டு அகலமாக்கப்பட்ட இருவழிப் பாதையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (படம்:ஜெ.கலையகன்)

# மோசமான நிலையில் மாலுசந்தி பஸ் தரிப்பிடம்

வடமராட்சி மாலுசந்தி பஸ் தரிப்பிடம் மிகவும் மோசமான நிலையில் விழும் தறுவாயில் காட்சி அளிக்கிறது.

இத் தரிப்பிடம் சேதமடைந்திருப்பதால் பயணிகள் வீதியோரத்தில் வெய்யிலில் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

ஏராளமான பயணிகள் கூடும் இப் பஸ் தரிப்பிடத்தைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுகின்றனர். (150)

# காரைநகர் வலந்தலைக்குளம் புனரமைப்பு பணிகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் பணிப்பிற்கமைய காரைநகர் வலந்தலைக்குளம் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் தற்சமயம் முடிவுறும் நிலையை அடைந்திருப்பதாக யாழ். நீர்ப்பாசனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உவர் நீர்த்தடுப்பணை வேலைத் திட்டத்தின் கீழ் மண்டைதீவு உவர்நீர் தடுப்பணை புனரமைப்பு வேலைகள் முற்றுப் பெற்றிருப்பதாகவும், அராலியில் இருந்து பொன்னாலை வரையான உவர்நீர் தடுப்பாணை புங்குடுதீவு மடத்துவெளி உவர் நீர்த்தடுப்பணை, வேணல் உவர் நீர்த்தடுப்பணை ஆகியவற்றின் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் யாழ். நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (பா)

# 240 வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை, தடுப்பூசி சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினரினால் இவ்வருடம் மே மாதம் வரை 240 வளர்ப்பு நாய்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை, விசேட தடுப்பூசி மருந்தேற்றல் போன்றவை இவற்றில் அடங்குகின்றன.

இதேவேளை ஆடு, மாடுகளுக்கான சினைப்படுத்தல் தொடர்பான பல்வேறு திட்டங்களும் இவ் அலுவலகத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான திட்டங்கள் பொது மக்களது பகுதிக்குச் சென்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

மேலும் கால்நடை வைத்திருப்போர் பண்ணையில் அமைந்திருக்கும் யாழ். கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்படி சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பா)

# மாலுசந்தி வரதராஜ பெருமாளுக்கு தீர்த்தக்கேணி அமைப்பு

(வரணி)

வடமராட்சி மாலுசந்தி வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு பல இலட்சம் ரூபா செலவில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தில் இதுவரை காலமும் ஆலயத்தின் உள்ளே உள்ள கிணற்றிலே தான் தீர்த்தமாடுவது வழக்கமாக இருந்தது.

தற்போது தீர்த்தக்கேணி அமைக்கப்படுவதால் இனிவரும் உற்சவ காலங்களில் இக்கேணியில் தீர்த்தமாட வசதி செய்யப்பட்டுள்ளது. (150)

# சான்றிதழ் வழங்கல்

(வரணி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவு வாய்ப்பாடு மனனப் போட்டியில் தரம் 4, 5 வகுப்புக்களில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

யாழ். வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் சான்றிதழ்களை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிப் பாராட்டு தெரிவித்திருந்தார்.

கடந்த மாசி மாதம் 24 ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இப் போட்டிகள் இடம்பெற்றிருந்தன. (150)

# விலை இறங்கும் மரக்கறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் மருதனார் மடம், திருநெல்வேலி, சுன்னாகம் ஆகிய சந்தைகளில் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்பட்ட மரக்கறிகளின் விலை சற்று குறைவடைந்துள்ளது.

கிலோ 160 ரூபாவாக இருந்த கத்தரிக்காய் 80 ரூபாவுக்கும், 100 ரூபாவாக இருந்த உருளைக்கிழங்கு 80 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

வாழைக்காய் 20 ரூபாவுக்கும், கரட் 80 ரூபாவுக்கும், லீக்ஸ் 120 ரூபாவுக்கும், தக்காளி 160 ரூபாவுக்கும், 400 ரூபாவாக இருந்த முருங்கைக்காய் தற்போது 160 ரூபா முதல் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. மரவள்ளிக்கிழங்கு 30 ரூபாவுக்கும், பச்சைமிளகாய் 60 ரூபாவுக்கும், சின்ன வெங்காயம் 50 முதல் 70 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் 80 ரூபாவுக்கும், கீரை 20 முதல் 30 வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

# மாசேரி - கப்பத்தை மயான வீதியை புனரமைப்பு செய்யுமாறு கோரிக்கை

தென்மராட்சி வரணி மாசேரி சாளம்பை கப்பத்தை மயான வீதி மாரிகாலத்தில் பாவிக்க முடியாதவாறு காணப்படுகின்றது.

மழை காலங்களில் இடுப்பளவு தண்ணீரில் சடலங்களை எடுத்துச் சென்றே தகனம் செய்ய வேண்டியுள்ளது.

தாழ்ந்த பிரதேசத்தில் உள்ள இந்த மயானத்தில் மாரிகாலத்தில் உடல்களை தகனம் செய்ய செல்வோர் வாகனங்களை வீதியில் நிறுத்தி விட்டுத்தான் செல்ல வேண்டியுள்ளது.

தற்போதைய கோடை காலத்தில் இந்த தாழ்ந்த பிரதேச பாதையை சீர் செய்தால் மாரி காலத்தில் எந்தவித இடையூறும் இல்லாது இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள முடியும். (150)



கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மருத்துவமனையின் பழைய இடத்தில் இப்பணிமனை அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (படம்: ஜெ.கலையகன்)

02) கணினியில் சகல தொழிற்பாடுகளும் எண் முறைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.
a) பின்வரும் தசம எண்களினை துவிதச் சமவலுவில் தருக. 1) 25 2) 100 3) 512
b) தரப்பட்டுள்ள துவிதச் சமவலுவிலுள்ள எண்களினை தசமத்திற்கு மாற்றுக? 1) $11111_2$ 2) $101010_2$ 3) $100001_2$
c) ஒரு பிற்று (bit) எத்தனை Character இனை கொண்டுள்ளது?
d) தற்பொழுது தேக்க சாதனங்களாக வரும் தேக்க சாதனங்களிற்கு உதாரணம் தருக.


03) a) பிரயோக மென்பொருட்களுக்கு நான்கு உதாரணம் தருக.
b) Modem இன் தொழிற்பாட்டினை விளக்குக?
c) கணினியினை வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் முறைகள் 2 தருக.
d) இயங்கும் முறைமை (Operating System) என்பதில் இருந்து யாது விளங்குகிறீர்? இயங்கு முறைமைக்கு 4 உதாரணம் தருக.

04) a) $F5SD_{16}$ இற்கு சமனான தசம எண்ணினை காண்க?
b) 1) பின்வரும் உண்மை (truth table) அட்டவணையை பயன்படுத்தி F இன் விளைவை சமன்பாட்டில் தருக.
2) இவ் விளைவினை காட்ட தர்க்க படலையை வரைக.

| A | B | C | F |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 0 | 1 |
| 0 | 1 | 1 | 0 |
| 1 | 0 | 0 | 1 |
| 1 | 0 | 1 | 0 |
| 1 | 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 | 0 |

c) பின்வரும் தர்க்க படலைகளை குறியீட்டினால் காட்டுக? 1) NAND 2) NOR 3) XOR
d) பின்வரும் Octal, Hexadecimal எண்முறைமைகளை துவிதச் சமவலுவிற்கு மாற்றுக?
1) $567_8$ 2) $321_8$ 3) $263_8$ 1) $5SAC_{16}$ 2) $AFC_{16}$ 3) $789_{16}$

5) திரு பெரேரா தனது சிறியளவிலான அரிசி விற்பனை நிலையத்தின் வினைத்திறன் நடவடிக்கைக்காக கணினியை உபயோகித்து வருவதுடன் அரிசி வழங்குனர்களின்
தகவல்களை சேமிப்பதற்காக விரிதாள் மென்பொருளை பயன்படுத்தி வருகின்றார்.



| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Supplying Rice to the Market in tons | | | | | | |
| 2 | Sup_No | Jan | Feb | Mar | Total | Average | Grading |
| 3 | s1 | 60 | 80 | 80 | | | |
| 4 | s2 | 60 | 60 | 60 | | | |
| 5 | s3 | 40 | 70 | 40 | | | |
| 6 | s4 | 20 | 60 | 80 | | | |
| 7 | s5 | 10 | 60 | 20 | | | |
| 8 | s6 | 20 | 40 | 60 | | | |
| 9 | s7 | 50 | 50 | 40 | | | |
| 10 | s8 | 60 | 30 | 80 | | | |
| 11 | | | | | | | |
| 12 | Max | | | | | | |
| 13 | Min | | | | | | |
| 14 | | | | | | | |

i. மேற்குறித்த நடவடிக்கைக்கு விரிதாளை பயன்படுத்துவதன் இரு அனுகூலங்களை குறிப்பிடுக.
ii. பின்வருவனவற்றிற்கு பொருத்தமான சூத்திரங்களை எழுதுக.

A) முதலாவது வழங்குனரால் வழங்கப்பட்ட அரிசியின் மொத்த அளவை காண்பதற்காக சிற்றறை E3 இல் உள்ளடக்க வேண்டிய சூத்திரம் யாது?
B) முதலாவது வழங்குனரால் வழங்கப்பட்ட சராசரி அரிசி அளவை பெற்றுக்கொள்ள F3 இல் உள்ளடக்க வேண்டிய சூத்திரம் யாது?
C) தை மாதத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய அரிசியின் உயர்ந்த பட்ச அளவை கணிப்பிட சிற்றறை B12 உள்ளடக்க வேண்டிய சூத்திரம் யாது?

D) தை மாதத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய அரிசியின் மிகக் குறைந்த அளவை கணிப்பிட சிற்றறை B13 இல் உள்ளடக்க வேண்டிய சூத்திரம் யாது?

b) விரிதாள் மென்பொருளிற்கு பதிலாக database management software பயன் படுத்தப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட தகவல்கள் ஒரே அட்டவணையில் சேமிக்கப்பட்டுள்ளதாகவும், விநியோகஸ்தர்கள் தொடர்பான தனிப்பட்ட தகவல்கள (personal informations) வேறொரு அட்டவணையில் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் கருதிக் கொள்க.

i. இரு அட்டவணைகளிற்குமிடையிலான தொடர்பை பேணுவதற்கு பொருத்தமான Field name, type என்பவற்றை தருக.
ii. தனிப்பட்ட தகவல்கள் தொடர்பான அட்டவணையில் உள்ளடக்கக்கூடிய Field கள் ஐந்தை பெயரிடுக.
iii. database software ஒன்றில் பின்வரும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு காணப்படக்கூடிய வசதிகளை குறிப்பிடுக.

A. ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தரவுகளை சேமித்தல்

B. ஒவ்வொரு வழங்குநர்களினாலும் தை மாதத்தில் மாத்திரம் வழங்கப்பட்ட அரிசியின் அளவை காட்சிப்படுத்தல்


C. மேற்குறிப்பிட்ட செயல்முறைப்படுத்தப்பட்ட தகவலை உட்புகுத்த இடைமுகத்தை அமைத்தல்

D. செயல்முறைப்படுத்தப்பட்ட தகவல்களை printout எடுப்பதற்கு ஒழுங்கமைத்தல்

6) பின்வருவனவற்றிற்குரிய பாய்ச்சல் வரிப்படத்தை (Flowcharts) வரைக.
a) 1 – 49 இடைப்பட்ட ஒற்றை இலக்கங்களை காட்சிப்படுத்த மொத்த கூலி = மணித்தியாலத்திற்குரிய கட்டணம x வேலை செய்த மணித்தியாலங்கள்



# ICT & GIT மாணவர்களுக்கான வினாத்தாள்



# கல்வி முரசு

(AJ. Nimalrajan)



01. பின்வருவனவற்றில் எது பச்சைத் தரவாக (raw data) தரப்படுகின்றது.
1) ஒரே வயது உடைய மாணவர்களின் ஒவ்வொரு மாணவனினதும் உயரம்.
2) மாணவர்களின் உயரத்தை வகைப்படுத்திய பட்டியல். 3) உயரம் கூடிய மாணவனின் உயரம்.
4) மாணவர்களின் சராசரி உயரம்.

02. மூன்றாம் தலைமுறைக் கணினிக்கு அடிப்படையாய் அமைந்தவை.
1) வெற்றிடக் குழாய்கள் 2) திரான் சிஸ்ரர்
3) ஒன்றிணைந்த சுற்றுக்கள் 4) நுண்முறை வழியாக்கிகள்

03. கணினியின் நிலையான பாகங்களை விவரிக்க பயன்படும் மிகவும் பொருத்தமான பதம்.
1) மென்பொருள் 2) வன் பொருள்
3) செய்யுட் தொகுதி 4) இணைப்புக்கருவி.

04. கணினி முறைமையினூடாக அறிவுறுத்தல்களை முறைவழியாக்க (Process) கணிப்புக்களை செய்து தருக்கத் துணிபுகளை செய்து தரவுப் பாய்ச்சலை முகாமிக்கும் கணினியின் பகுதி.
1) வண் வட்டு 2) ROM 3) தரவுப்பாட்டை 4) CPU.

05. பின்வரும் கூற்றுக்களை பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.
A) சுட்டி ஓர் உள்ளீட்டுச் சாதனமாகும். B) தெரிவிப்பி (Moniter) ஓர் வருவிளைவுச் சாதனமாகும்.
C) இறுவட்டு (Compact disk) என்பது தேக்கச் சாதனமாகும். சரியான கூற்றை / கூற்றுக்களை தெரிவு செய்க.
1) A மட்டும் 2) C மட்டும் 3) A,B மட்டும் 4) A,B,C ஆகிய மூன்றும்.

06. மேசை மேல் கணினி (Desk top) பின்வரும் எவ்வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
1) நுண் கணினி (Micro computer) 2) சிறு கணினி (Mini computer)
3) தல்லைமைக் கணினி ( Main frame) 4) மீக்கணினி ( Supper computer)


07. கணினி தொகுதியில் முதன்மை வலு செயலிழக்கும் போது காப்பு வலுவை வழங்கப் பயன்படும் பாகம்.
1) மத்திய நிரற்படுத்தற் பகுதி 2) தெரிவிப்பி
3) இடை மறிக்கப்படா வலு வழங்கி (UPS) 4) மின்கலம்

08. தற்கால தனியார் கணினியின் மத்திய நிரற்படுத்தற் பகுதியின் கடிகாரத் துடிப்பு வீதம்.
1) GHZ (gigahertz) 2) Mbps (Megabits per second)
3) GB (Giga byte) 4) IPS ( Instruction per second)

09. கணினியின் தர்க்க பகுதியின் தொழிற்பாடானது.
1) கணினிக்கு வழங்கப்படும் தரவுகளை சேமிக்கும் பகுதியாகும். 2) கணினியின் தரவுப்பாட்டை பகுதியாகும்.
3) கணினியின் தரவுகளினை கணித செயற்பாடுகளை மேற்கொள்ளும் பகுதியாகும்
4) கணினியினைக் கட்டுப்படுத்தும் பகுதியாகும்.

10. குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தினுள் எல்லைப்படுத்தப்பட்ட வலையமைப்பிற்குறிய பெயர்.
1) LAN 2) WAN 3) VAN 4) MAN

11. வரிப்படத்தில் காணப்படும் கணினி வலையமைப்பு எவ்வகையானது?



1) பாட்டை (BUS)
2) விண் மீன் (Star)
3) வளையம் (Ring)
4) மரம் (tree)

12. Micro soft vista என்பது எதற்கு உதாரணமாகும்.
1) பிரயோக மென் பொருள் 2) முறைமை மென் பொருள்
3) முறைமை பயன்பாடு (System Utility) 4) வரைவியல் பயனர் இடைமுகம்

13. ஒரு gigabytes எத்தனை மெகா பைற்றுக்கள் உள்ளது.
1) 8 2) 1000 3) 1024 x 8 4) 1024

14. பின்வரும் கூற்றுக்களில் எவை தவறானவை.
A – பிற்று (Bit) என்பது கணினி முறைவழியாக்கத்தக்க சிறிய தகவல் அலகு.

B – பைற்று (Byte) என்பது கணினி முறைவழியாக்கத்தக்க சிறிய தகவல் அலகு.
C - பிற்று 8 பைற்றுக்களைக் கொண்டது. D – பைற்று 8 பிற்றுக்களைக்கொண்டது.


1) A,C Mfpad 2) A,D 3) B,C 4) B,D

15. $11110_2$ இன் தசமச் சமவலு
1) 5 2) 30 3) 4 4) 12

16. தசம் 20 இன் துவிதச் சமவலு.
1) $10100_2$ 2) $11001_2$ 3) $10101_2$ 4) $11111_2$

17. பின்வருவனவற்றில் எது மிகப் பெரிய பெறுமதியைக் கொண்டது.
1) $11001_2$ 2) $36_8$ 3) $1B_{16}$ 4) $55_{10}$

18. இலக்கத் தருக்கத்தில் கீழ் குறித்த P,Q ஆகிய குறியீடுகள் வகைக் குறிக்கும் படலைகள் முறையே.




1) NOT,OR 2) NOR,OR
3) OR,AND 4) NOR,AND

19. A,B என்னும் இரு உள்ளீடுகளையும் வருவிளைவு F ஐயும் உடைய ஒரு குறித்த தருக்கப்படலையின் மெய்நிலை அட்டவனை (Touth table) இங்கு தரப்பட்டுள்ளது. இது எவ்வகையானது?

| A | B | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |

1) AND 2) OR
3) NOR 4) NAND

20. பின்வரும் கூற்றக்களுள் எது / எவை தகவல் முறைமை பற்றி உண்மையானது / உண்மையானவை
A- பிரயோக மென்பொருள் தரவுகளை தகவலாக மாற்றுகின்றது.
B- முறைமை மென்பொருள் வன்பொருளை இயக்குகின்றது.
1) A மட்டும் 2) B மட்டும்
3) A,B இரண்டும 4) மேற்குறித்த கூற்றுக்கள் இரண்டும் தவறானவை.

21. Windows பணிச் செயல் முறையின (Operating system) கீழ் செய்யப்படும் பிரயோக செய் நிரல்களில் பாடத்தையும (Text) வரைபையும் (Graphics) அழிப்பதற்கு பின்வரும் செய்பணிகள (Operations) எதனைப் பயன்படுத்தலாம்.
1) வெட்டி ஒட்டு (Cut & Paste) 2) வெட்டி நகல்செய (Cut & Copy)
3) தெரிந்து அழித்தல (Select & Delete) 4) அழித்துச் செருகு (Erase & Insert)

22. Microsoft word பொதியைப (Package) பயன்படுத்தி அவற்றை தயாரித்தல் பற்றி உண்மையானது யாது?
1) ஆவனத்தை அச்சடிக்கும் போது ஒவ்வொரு கோட்டின் இறுதியிலும் நுழைவுச் சாவி (Enter key) I அழுத்தவேண்டியதில்லை.
2) ஆவனத்தின் வெவ்வேறு பக்கங்கங்களை வெவ்வேறு அளவுகளில் அமைக்க முடியாது.
3) ஆவனத்தை ஆரம்பிக்கும்போது எல்லைக் கோடுகளை செப்பன் செய்தல் கட்டாயமானது.
4) குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி இலகுவாக செயற்பாடுகளை செய்வது கடினமாகும்.

23. Microsoft word இல் புதிய வேலை பரப்பை ஆரம்பிப்பதற்கும் சேமிப்பதற்கான குறுக்கு வழிச் சாவிகள் முறையே.
1) Ctrl + Ctrs O 2) Ctrl + Ctrl S 3) CtrlN + CtrlO 4) Ctrl N + Ctrl O

24. பின்வரும் மென்பொருட்களில் எது தரவுகளை உள்ளீடு செய்து அறிக்கை (report) பெறுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.
1) சொல்முறை வழிப்படுத்தல (word processing) 2) இணைய மேலோடி (Internet browser)
3) விரிதாள் முறைவழிபடுத்தல ( Spread sheet processing) 4) தரவு முகாமைத்துவம் (Data base management)

25. கல வீச்சின் சராசரி பெறுமானத்தை காண்பதற்கு Micro soft Excel இல் எச்செயல் (Function) பயன்படுத்தப்படுகின்றது.
1) (1) =max ( ) 2) =min ( ) 3) =Avg ( ) 4) = lower ( )

26. ஒரு micro soft Excel விரிதாளில் ஒரு பகுதி உருவில் காணப்படுகின்றது 5,7,10 என்று குறிக்கப்பட்டபெறுமானங்களைக் காட்ட பின்வருவனவற்றில் எதனைப் பயன்படுத்தலாம்.

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | 6 | | |
| 2 | 7 | | |
| 3 | 10 | | |
| 4 | | | |

1) = Sum(A1:A3)
2) 6+7+10
3) Sum (A1,A2
4) Sum (A1-A3)

27. தரப்பட்டுள்ள Micro soft word இல் ஒரே தடவையில் 5 இடைவெளிகளை விட பயன்படுத்தும் சாவி எது?
1) இடைவெளி சட்டம (Space bar) 2)அம்புக்குறி
3) Enter சாவி 4) TAB சாவி





28. பின்வருவனவற்றில் தகவலின் இயல்பாக இருக்க முடியாதது எது?
1) தரவுடன் தொடர்பானது 2) பருமன் 3) சரியாக இருத்தல் 4) நேரம் தேவையற்றது

29. சரியான கூற்றை தெரிவு செய்க.
1) Lacer வன்பிரதி எடுப்பான் வெளியிடு கருவியாகும் 2) தொலைபன்னி வெளியிடு உள்ளிடு கருவியாகும்
3) சுட்டி வெளியிடு கருவியாகும் 4) விசைப்பலகை வெளியிடு கருவியாகும்

30. LCD தெரிவிப்பி தொடர்பான தவறான கூற்றை தெரிவு செய்க.
1) LCD திசை துல்லியமான படங்களைத் தரும் 2) குறைந்தளவு சக்தியை நுகரும்
3) இரண்டு கண்ணாடி/ பிளாஸ்ரிக் தட்டுக்களில் இடையில் திரவத்தை கொண்டிருக்கும்
4) வேகமாக (Faster) உணரும் நேரத்தைக் கொண்டது

31. கணினியை Booting செய்வது என்பதில் மிகவும் பொருத்தமான கூற்று எது?
1) தரவுகளை பிரதான நினைவகத்தில் இருந்து Catch நினைவகத்திற்கு பிரதி செய்யும் முறைவழியாக்கலாகும்.
2) இது தரவுகளை வன் தட்டில் இருந்து பிரதான நினைவகத்திற்கு செயற்பட வைக்கும் முறைவழியாக்கல் ஆகும்.
3) இது செயற்பாட்டுத் தொகுதியை Catch நினைவகத்திலிருந்து பிரதான நினைவகத்திற்கு செயற்படவைக்கும் முறை வழியாக்கலாகும்.
4) இது செயற்பாட்டுத் தொகுதியை இரண்டாம் தரநினைவகங்களான CD Rom/ Floppy Disk இலிருந்து பிரதான நினைவகத்திற்கு மாற்றும் செயற்பாடாகும்.

32. பின்வருவனவற்றில் சரியான தகவல் எதுவாகும்.
1) DVD, CD இலும் பார்க்க குறைந்தளவு கொள்ளளவு உடையது.
2) Pen Drive/ Flash இல் தரவு ஒரு தடவை மாத்திரம் எழுதமுடியும்.
3) காந்த நாடாக்களில் கூடியளவு தரவுகளை சேமிக்க முடியும், இவை இரண்டாந்தர தேக்க சாதனத்திற்கு மிகவும் பொருத்தமானவையாகும்.
4) வன் தட்டின் செயற்பட ஆரம்பிக்கும் நேரம் காந்த நாடாக்கள் செயற்பட ஆரம்பிக்கும் நேரத்தினை விட கூடவாகும்

33. சுட்டி/ விசை பலகை பொருத்தும் தரப்படமாக கருதக் கூடியது.

34. Anti Virus Program என்பது வகைப்படுத்தப்படும் பிரிவு
1) Application Soft ware 2) System Soft ware 3) Utility Programme 4) Firm Ware

35. Micro Soft Windows desk வழி இல் எவ icon இல் வட்டுக்களின் திறவு கோல்கள் (disk drive) காணப்படும்.
1) My Document 2) My Computer 3) Recycle bin 4) Control Panel

36. Micro soft word இல் எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்கு பயன்படுத்தும் கருவி
1) Spelling & Grammar 2) Speech 3) Word count 4) Word Art

37. தரப்பட்ட தரவிலுள்ள சகலவற்றையும் தெரிவு செய்ய பயன்படுத்தும் சாவி
1) Ctrl + enter 2) Shift + A 3) Alt + A 4) Del + A

38. Micro Soft Word இல் அட்டவணை ஒன்றை உள்ளீடு செய்வதற்கு நீர் தெரிவு செய்யும் பிரதான வழிகாட்டல (Main Menu)
1) Insert 2) View 3) Edit 4) Table

39. உள்ளீடு செய்த அட்டவணை ஒன்றின் இரு நிரையிலுள்ள நிரல்களை ஒன்று சேர்ப்பதற்கு தெரிவு செய்யும் வழிகாட்டல் (menu)
1) Insert 2) Delete 3) Merge 4) Split

40. Micro Soft Word இல் எழுத்தின் வடிவங்களை மாற்றுவதற்கு பயன்படும் பகுதி
1) Font 2) Bullet & Number 3) Picture 4) Lower Case

## பகுதி II

**முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**

01) A) 1) கணினியை உருவாக்குவதற்கு படி முறையில் உருவாக்கப்பட்ட பல உபகரணங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றிற்கு 3 உபகரணங்களை பெயரிடுக.
2) 4ஆவது தலைமுறைக் கணனியை உருவாக்குவதற்கு பயன்படுத்திய தொழில்நுட்பம் யாது?

B) 1) கணினியை வகைப்படுத்தும் முறைகளை தருக.
2) நீர் வகைப்படுத்திய வகை ஒன்றில் காணப்படும் பிரிவுகளை தருக.

C) 1) கணினியின் பிரதான பகுதிகள் 5 தருக.
2) நீர் குறிப்பிட்ட பகுதிகளில் ஏதாவது இரண்டிற்கு இரண்டு உதாரணம் வீதம் தருக.

D) 1) கணினி வலைப்பின்னல் என்பதில் இருந்து யாது விளங்குகின்றீர்?
2) கணினி வலைப்பின்னலின் நன்மை, தீமை 2 வீதம் தருக.

E) கணினியில் தரவும், தகவலும் என்னும் பதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.
1) தரவு என்பதனை விளக்குக, 2 உதாரணம் தருக.
2) தகவல் என்பதனை விளக்குக, 2 உதாரணம் தருக.

# நாட்டின் உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதியால் அதிகரித்துள்ளது

## -பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பொருளியலாளர்

(ஸர்மி, கஜந்தா-சிகரம்)

தற்போது எங்கள் நாட்டில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதுடன், ஏற்றுமதியில் இந்த உற்பத்தியானது வலுவான வளர்ச்சியை அடைந்துள்ளதாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பொருளியலாளர் யோ.ஜயகாந் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் 2011ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட விளக்கவுரையிலேயே ஜயந்த இவ்வாறு குறிப்பிட்டார். அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

நாட்டின் பண வீக்கம் ஒற்றை இலக்க மட்டத்திலேயே காணப்படுகின்றது .பல்வேறு சவால்களிற்கு மத்தியிலும்,கடந்த 2011ஆம்ஆண்டு அனைதத்துத் துறைகளிலும் வெற்றிகரமான ஆண்டாகத் திகழ்ந்தது எனவும், தொடர்ச்சியாகக் கிடைத்த சமாதானம், முதலீட்டாளர்களின் நம்பிக்கை, உள்நாட்டு உணவு உற்பத்தி, நாணய இறை மற்றும் நிதியியல் துறைகளுக்கு உதவிகரமாக அமைந்த கொள்கைகள் என்பன இந்த வெற்றிக்குக்காரணமாக அமைந்த்து எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், உலகளாவிய ரீதியில் பொருளாதாரத்தில் காணப்பட்ட மந்தகதியிலான மீட்சி, எண்ணெய் விலை உயர்வு, அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி, வெளிநாட்டுச் செலாவணி, சந்தையில் காணப்பட்ட அழுத்தம், உயர்ந்த நடைமுறைக்கணக்குப் பற்றாக் குறை போன்ற சவால்களை தாம் எதிர்நோக்கியதாகவும் குறிப்பிட்ட அவர், உயர்ந்த வளர்ச்சி, உயர்ந்த முதலீடுகள், தாழ்ந்த பண வீக்கம், கட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவுப் பற்றாக்குறை, உறுதியான வட்டி வீதங்கள், தொழில் இன்மையினால் ஏற்பட்ட வீழ்ச்சி போன்ற சவால்களை எல்லாம் சாதனைகளாக மத்திய வங்கி மாற்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு இரவில் இரு வீடுகள் திருட்டு; பெறுமதியான நகைகள் கொள்ளை

(சிகரம்)

சங்கானை நிற்சாமம் பகுதியில் ஒரே இரவில் இரண்டு வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நூள்ளிரவு 12மணிக்கும் 1 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பொல்லுகள், இரும்புக் கம்பிகள் போன்றவற்றுடன் சென்ற திருடர்கள் கோடாரியால வீட்டின் முன்பக்கக் கதவினைக் கொத்தி உள் நுழைந்தனர்.வீட்டிலுள்ளவர்களை தாம் கொண்டு வந்த பொருட்களால் தாக்கப்போவதாக மிரட்டி ஓரிடத்தில் இருக்குமாறு தெரிவித்து விட்டு நகைகள் பணம் என்பவற்றினைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பக்கத்து வீட்டிற்குள்ளும் முன் பக்கக் கதவினைக் கோடரியால் கொத்தி உள் நுழைந்த திருடர்கள் அங்கேயும் நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றினைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் வெளியேறியதன் பின்னர் வீட்டுக்காரர்களின் சத்தம் கேட்டு அயலவர்கள் திருடர்களைத் துரத்திச் சென்றபோதும் அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சங்கானைப் பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(கஜந்தா-சிகரம்)

தற்போது நாட்டில் பெருகி வரும் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சங்கானை சுகாதாரத் திணைக்களம், சங்கானை வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றது.

சங்கானை சுகாதாரப் பணிமனையினைச் சேர்ந்த 25 மேற்பட்ட தொண்டர்களால் வீடுவீடாகச் சென்று டெங்கு நோய்கள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படுவதுடன், வீடுகள் மற்றும் பொது இடங்கள் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற நிலையில் சூழல் மற்றும் வீடுகளினை வைத்திருந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு சுகாதாரத் தொண்டர்களினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக் சுகாதாரத் தொண்டர்கள் சங்கானைப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் சென்று டெங்கு விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதுடன், தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுன்னாகம் கதிரமலை சிவனின் இரதோற்சவம்

(ஷர்மி- சிகரம்)

யாழ்ப்பாணம்-சுன்னாகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீசுன்னாகம் கதிரைமலை சிவன் ஆலயத் தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

காலை 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து, சுவாமி உள்வீதியுலா வந்ததுடன், தேரில் ஏறி வெளிவீதியுலா வந்தார். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட இந்தத் தேர்த்திருவிழாவின் போது, புகழ் பெற்ற தவில், நாதஸ்வரக் கலைஞர்களான என்.ஆர்.கே.கோவிந்தசுவாமி குழுவினரால் மங்கள இசை வழங்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20.05.2012) இடம்பெற்றது. இன்று காலை சங்காபிஷேகமும் பிற்பகல் சிவன் மற்றும் அம்மனுக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளதுடன், புதன்கிழமை வைரவர் மடை நடைபெற்று மகோற்சவம் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

தேடலையும் தத்தளிப்புகளையுமே இலக்கியங்கள் முன்வைக்கின்றன. தெளிவு, அந்தக் கொந்தளிப்புள் சாரமாகத் திரண்டு வருவது. ஆனால் அது அந்த ஆசிரியனால் உருவாக்கப்படுவது அல்ல. சமானமான மனம் கொண்ட வாசகன் ஒருவன், தன் கற்பனையை மத்தாக்கிக் கடைந்து அதை அடைகிறான். நமக்கு தஸ்தாயெவ்ஸ்கி நாவல்களில் ஞானத்தின் ஒளி கிடைக்கிறது; அவர் வாழ்நாள் முழுக்க இருளின் கொந்தளிப்புடன் அலைந்தார். டால்ஸ்டாய் எப்போது ஞானத்தைத் தொட்டாரோ அதன்பின் எழுதவில்லை. குட்டிக்கதைகள்தான் எழுதினார்; எழுதியவற்றை நிராகரித்தார்.

தேடலே இலக்கியமாகிறது. கண்டடைதல் மௌனத்தையே உருவாக்கும். – ஜெயமோகன்

டால்ஸ்டாய், தஸ்தாயெவ்ஸ்கி போன்றோரது நாவல்களைப் போன்ற பெரிய நாவல்கள் ஏன் இங்கு வரவில்லை என்ற கேள்வி மிக முக்கியமான கேள்வி. நம்முடைய எழுத்தாளர்கள் வாழ்க்கையோடு மோதுதல் என்பது இங்கு மிகவும் குறைவாக இருக்கிறது. எல்லாவற்றிலும் சமரசம். மோதுதல் ரொம்பக் குறைவு. அனுபவங்கள் குறைவு. வாழ்க்கைக்குள் அதிகமாக ஊடுருவிப் போய், பிரச்சினைகளை எதிர்கொண்டு, அடிபட்டு, அவமானப்பட்டு, துன்புற்று– இப்படியெல்லாம் பலவித அனுபவங்களுக்கு ஆளாகி, அனுபவங்களோடு மட்டுமன்றி அவற்றிற்கான புரிதலோடு அவற்றை அணுக முடிந்தால் தமிழில் பெரிய நாவல்கள் உருவாகலாம். எனக்கு தமிழ் போதும்; வேறு மொழியோடு, வேறு நாட்டோடு தொடர்பு தேவையில்லை; தத்துவங்கள் தேவையில்லை என்று கூறும் போக்கு இங்கு இருக்கிறது. இதுபோன்ற எண்ணங்களைத் தாண்டி வர வேண்டும். – ஞானி

மனிதன் என்பவன் விடுவிக்கப்பட வேண்டிய ஒரு புதிர். உனது வாழ்நாள் முழுவதும் அதை விடுவிப்பதற்காகக் கழித்தாலும் காலத்தை வீணாக்கியதாகக் கூறாதே. நான் அப்புதிரை விடுவிப்பதில் ஈடுபட்டிருக்கிறேன். ஏனெனில் நான் ஒரு மனிதனாக இருக்க விரும்புகிறேன்.

– தஸ்தாயெவ்ஸ்கி

எழுத்துக்கென வலிந்து எதையும் தேடி அலைவதில்லை நான். மண்சார்ந்த வாழ்க்கையில் பெரும் பிடிப்புள்ள உழவுக் குடும்பத்திலிருந்து ஒருவன் முதன்முதலாக நகரத்தை நோக்கி வரும்போது கொண்டிருக்கும் அனுபவ செழுமை எனக்கு உண்டு. அவற்றில் இருந்தே என் எழுத்துக்கான விஷயங்களை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் நடக்க ஆரம்பித்தபோது எனக்கு முன்னால் ஒற்றைச் சுவடு கூட இல்லை. கால் முழுக்கக் குத்திய முட்களோடு நடந்தேன். ஒவ்வொரு முள்ளையும் பிடுங்கி எறியும்போது என் எழுத்துககள் உருவாகின்றன.

என் எழுத்துக்கள் நான் சார்ந்த உறவுகள், என் ஊர், ஊர் மனிதர்கள் என்று மிகக் குறுகிய சுற்றுக் கொண்டவை. நானற்ற எழுத்துக்கள் இல்லை என்றே சொல்லலாம். மிக உயரத்தில் ஒரு புள்ளியாகப் பறந்து செல்லும் விமானத்திற்கு என் மேட்டாங்காட்டு ஏரி மேட்டில் நின்றுகொண்டு கையசைக்கும் சிறுவனைப் போலவேனும் என் எழுத்துக்களுக்குள் எங்காவது நான் ஒளிந்து கொண்டிருப்பேன்.

– பெருமாள் முருகன்

ஒரு சிறுவனைப் போல நான் அன்றாட உலகைப் பார்த்து வியக்கிறேன், சிரிக்கிறேன், பொருமுகிறேன், நெகிழ்கிறேன், முஷ்டியை உயர்த்துகிறேன், பிணங்குகிறேன், ஒதுங்குகிறேன், சிலசமயம் கூச்சல் போடுகிறேன்... மனித நடமாட்டம் அற்ற இடங்களில் பல வர்ணங்களும் அமைப்புகளும் கொண்ட சின்னஞ்சிறு பூண்டு வகைகள் பூப்பதுண்டு. ஏன் பூக்கிறோம், யாருக்காக என்று அவைகளுக்குத் தெரியாது. ஒருக்கால் தெரிந்துகொள்ள அவை விரும்பவில்லை போலும். – தி.ஜானகிராமன்

பிடித்த வண்ணத்துப் பூச்சியை, அதைப் பிடித்த நேரத்தின் சந்தோஷத்தோடு, இன்னொரு மனிதரின் உள்ளங்கைக்கு மாற்றிவிடுகிற சிலிர்ப்பே, படைப்பில் கிடைக்கிற சந்தோஷம். விரலிடுக்கில் படபடக்கிற அந்தச் சிறகடிப்பை இன்னொரு கைக்கும் அதே சந்தோஷத்தோடு மாற்றிவிட முடிகிறவர்கள் பாக்கியவான்கள். – வண்ணதாசன்

என்னென்ன இரசாயனச் சேர்க்கைகளால் டைனமைட் உருவாக்கப்பட்டுள்ளதோ அதே இரசாயனச் சேர்க்கைகளால் ஆனவைதான் எனது புத்தகங்களும். வேறுபாடு என்னவென்றால் டைனமைட், ஒரே முறைதான் வெடிக்கிறது. ஒரு புத்தகமோ ஓராயிரம் முறைகள் வெடிக்கும்.

– எவ்கெனி ஸாமியாடின்

# புலி ஆதரவாளர்களுக்கு எதிரான போராட்டம் ஒத்திவைப்பு


(புதுடில்லி)

புலிகளின் ஆதரவு தலைவர்களைக் கண்டித்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் சிறிபெரும்புதூர் ராஜிவ் நினைவிடத்தில் காங்கிரசார் உண்ணாவிரதம் மேற்கொள்ள பொலிஸார் அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர்.


இதனால், உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் படுகொலையின் மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி புலிகளின் ஆதரவாளர்கள் சென்னை, கோவை உள்ளிட்ட சில இடங்களில், பொதுக் கூட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்தினர். அப்போது, ராஜிவ் கொலையை கொச்சைபடுத்தியும், உச்ச நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் வகையிலும் சிலர் உரையாற்றினர்.

இவர்களின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜிவ் நினைவிடத்தில், ராகுல் காந்தி மக்கள் சேவகர்கள் சார்பில், நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் மேற்கொள்ள பொலிஸாரிடம் அனுமதி கேட்டனர்.

ராஜிவ் நினைவிடத்தில், அன்னதானம் உள்ளிட்ட பல வேறு நிகழ்ச்சிகளை, காங்கிரசார் நேற்றுமுன்தினம் நடத்தியதால், பொலிஸார் அனுமதி மறுத்தனர். இந்நிலையில், சென்னை அண்ணாசாலை மின்சார வாரிய அலுவலகம் பின்பகுதியில் உண்ணாவிரதம் மேற்கொள்ள, காங்கிரசார் அனுமதி கேட்டுள்ளனர். இதற்கு, பொலிஸார் சம்மதம் தெரிவித்துள்ளதால், வரும் 27 ஆம் திகதிக்கு, உண்ணாவிரதப் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.




# நேற்று ராஜிவ்காந்தி நினைவு தினம்



(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் 21 ஆவது நினைவு தினம் நேற்றுமுன்தினம் நாடுமுழுவதும் அனுசரிக்கப்பட்டது.

இதனையொட்டி ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா உள்ளிட்ட தலைவர்கள் ராஜிவ் நினைவிடமான வீர் பூமியில் மரியாதை செலுத்தினர்.

துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, டில்லி கவர்னர் தேஜேந்தர் கண்ணா, டில்லி முதல்வர் ஷீலா தீட்சித், பிரியங்கா, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கடந்த 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி சிறிபெரும்புதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற ராஜிவ் காந்தி குண்டு வெடிப்பில் பலியானார்.

## தடுப்பணை கட்டினால் தமிழகம் பாதிக்கும்



(புதுடில்லி)

பெண்ணையாறுக்கு குறுக்காக தடுப்பணை கட்டுவதற்கு கேரள அரசு திட்டமிட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் கேரள அரசுக்கு ஆலோசனை வழங்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தடுப்பணை நிர்மாணிக்கப்படுமாயின் கிஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், குண்டலூர் மாவட்டங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்படுவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் பிரதமர் உடனடியாக தலையிட வேண்டுமெனவும் தமிழக முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காவேரி ஆற்றின் நீர் பங்கீடு குறித்தும் இரண்டு மாநிலங்களுக்கும் இடையில் சர்ச்சை நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




## ரூபாவின் பெறுமதி இந்தியாவிலும் சரிந்தது

அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாவின் பெறுமதி கடந்த சில தினங்களாக பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை சீர்செய்ய மத்திய அரசு முயற்சி செய்வதாகவும் செய்தியாளர்களிடம் அவர் கூறியுள்ளதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. ஐரோப்பிய வலயத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய நிதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்திய இராணுவத்திற்கு ரோபோ

(புதுடில்லி)

இந்திய இராணுவத்திற்கு பயன்படும் வகையிலான ரோபோ ஒன்றை தயாரிக்கும் பணியில் டில்லியைச் சேர்ந்த பொறியாளர் ஆகாஷ் சின்ஹா ஈடுபட்டுள்ளார். இந்த ரோபோக்கள் மும்பை பயங்கரவாத தாக்குதல் போன்ற சூழ்நிலைகளில் உதவும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளதாக ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ரோபோக்களால் பார்க்கவும் கேட்கவும் முடியும், வெடிகுண்டுகளை எடுக்கவும், செயல் இழக்கச் செய்யவும் முடியும், ரிமோட் மூலம் இவைகள் இயக்கப்படும் என்றார். 25 கிலோ எடை கொண்ட இந்த ரோபோ 50 கிலோ வரையிலான எடையை தூக்கும் திறன் கொண்டவை எனவும் ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# நேர்மையான அரசு அதிகாரி அடித்துக்கொலை



(புதுடில்லி)

முறைகேடாக அரசு நிலம் ஒதுக்கியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்திய அரசு அதிகாரி ஒருவர் மர்ம நபர்களால் அடித்துக் கொல்லப்பட்டார். நிர்வாக சேவை அதிகாரி எஸ்.பி.மகந்தேஷ் (வயது -48) என்பவரே மர்ம நபர்களால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் இறந்தார். மகந்தேஷ் மாநில கூட்டுறவுத் திணைக்களத்தில் கணக்குப் பிரிவில் பணியாற்றி வந்தார். தன்துறையில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சேர்ந்து ஈடுபட்ட முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த இன்போசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி நேர்மையான அதிகாரிகளை பாதுகாப்பது அரசின் கடமை என்று தெரிவித்தார்.

மேலும் நேர்மையான அதிகாரிகளுக்கு அரசின் மீதும் பொலிஸார் மீதும் நம்பிக்கை இல்லை என்றால் அவர்கள் தங்கள் கடமையை செய்ய முடியாது என்றும் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

## கங்கை நதி மாசுபடுவதை தடுக்க ஏழை விவசாயி ஒருவர் முயற்சி

(புதுடில்லி)

உத்திர பிரதேச மாநிலம் வாரணாசி(காசி)யில் உலக புகழ் பெற்ற காசி விசுவநாத சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு தரிசனம் செய்ய உள்நாடு, வெளிநாட்டிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இவர்கள் மூலவருக்கு வில்வம், பூக்கள், தேன், பால், இளநீர் போன்ற பல்வேறு பொருட்களால் அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர்.

பூஜைக்குப் பின்பு, பயனற்ற அப்பொருட்கள் கங்கை நதியில் கொட்டப்படுகின்றன. மேலும் கங்கை நதியில் இறந்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எரித்த பிணங்களை இந்நதியில் அப்படியே விட்டுவிடுவர்.

இதனால் நதி நீர் மாசுபடுவதோடு, சுற்றுச்சூழலும் மாசடைகிறது. இதைத் தடுக்கவும், பயனற்ற பொருட்களை உரமாக்கவும் அதே பகுதியைச் சேர்ந்த ரகுவன்ஷி என்பவர் முடிவெடுத்தார்.

இதையடுத்து கோவிலில் பூஜைக்குப் பின் குப்பையில் சேர்க்கப்படும் அப்பொருட்களை தனது உரக் கிடங்கிற்கு எடுத்துச் சென்று, உரமாக்குவது குறித்து அவர் கோவில் நிர்வாகிகளுடன் ஆலோசித்தார். அவரது விண்ணப்பத்தை பரிசீலித்த கோவில் நிர்வாகம் ஒப்புதல் அளித்து, அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

அந்த ஒப்பந்தத்தின் படி, கோவிலில் / தினமும் ஐந்து முதல் ஏழு தொன் வரை தேங்கும் பயனற்ற பொருட்கள், ரகுவன்ஷியின் உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படும். அதற்காக அவர் கோவிலுக்கு ரூபா 211 அளிப்பார்.

விவசாயியான அவர், தனது உரக்கிடங்கில் அவற்றை உரமாக்கிய பிறகு, நியாயமான விலைக்கு அவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்வுள்ளதாக தெரியவருகின்றது.

# மும்பை நட்சத்திரவிடுதியில் போதை விருந்து இளம்பெண்கள் உட்பட 100 பேர் கைது

(புதுடில்லி)

மும்பையில் நட்சத்திர சொகுசு ஹோட்டல் ஒன்றில் நடந்த போதை விருந்தில் கலந்துகொண்ட இளம் பெண்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். மும்பை நகரின் முக்கிய பகுதியில் ஜுகூ என்ற ஏரியாவில் ஒக்வுட் என்ற நட்சத்திர சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த ஹோட்டலில் வெளிநாட்டவர்கள் மற்றும் சில ஆண்கள், பெண்கள் ஆகியோர் சேர்ந்து போதை விருந்து நடத்துவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் இரவு 8.45 மணியளவில் ஹோட்டலுக்குள் புகுந்து அதிரடியாக சோதனை நடத்தினர். இச்சோதனையின் போது உஷாரான சிலர் அங்கிருந்து தப்பியோட முயற்சித்தனர். எனினும் இவ்விருந்தில் கலந்து கொண்ட அனைவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 19 பேர் வெளிநாட்டவர்கள் எனவும், 58 ஆண்கள், 38 பெண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இவ்விருந்து நடைபெற்ற இடத்தில் தலா 103 கிராம் எடை கொண்ட கோகைன் என்ற போதைப்பொருள் பாக்கெட்டுகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில், கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் 25 இல் இருந்து 35 வயதிற்குட்பட்டவர்கள் ஆவர். இவர்களை உடனடியாக பந்தரா நகரில் உள்ள ஒரு மருத்துவமனைக்கும், அந்தேரியில் உள்ள ஒரு மருத்துவமனைக்கும் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளோம். இதில் யார் யார் போதை மருந்தினை உட்கொண்டிருந்தனர் என்பது குறித்து வைத்தியர் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்படும்.

## சச்சின் எம்.பி ஆகலாம்



(புதுடில்லி)

சச்சின் எம்பியாக பதவி ஏற்கலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் ராஜ்யசபா எம்.பியாக நியமிக்கப்பட்டார். இதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதில் சச்சின் எம்.பியாவதில் தடையில்லை எனவும் இது தொடர்பாக மத்திய அரசு ஜுலை 5 ஆம் திகதிக்குள் பதிலளிக்குமாறு தெரிவித்துள்ளது. தற்போது சச்சின் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி வருகிறார். எதிர்வரும் 27ஆம் திகதி ஐ.பி.எல். போட்டிகள் முடிகின்றன. எனினும் நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் அவர் பதவியேற்பார் என தகவல் வெளியாகியுள்ளன.

# ஈரானுடன் அணு உடன்படிக்கையை ஏற்படுத்த முயற்சி




பாக்தாத் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் ஈரானுடன் அணு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படும் பகுதியைக்கண்காணிப்பது குறித்து தெஹ்ரானுடன் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கை ஏற்படுத்தப்படுமாயின், பாக்தாத் பேச்சுவார்த்தைக்கு அது நம்பிக்கையளிக்கும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஈரான் அதிகாரிகளுடன் ஐ.நா அணுசக்தி முகவர் நிலையத்தின் தலைவர் யுகியோ அமானோ நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்பிரகாரம் சர்சைக்குரிய அணுதிட்டம் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஈரானின் சிரேஷ்ட அதிகாரியான சாதி ஜலீலை, யுகியோ அமானே ஆகியோரை இவர் சந்தித்து உரையாடினார்.


© Reuters

அமெரிக்காவில் நடைபெற்ற, 8 மிகப்பெரிய பொருளாதார நாடுகளுக்கிடையிலான ஜி-8 உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் தீவிரமான கலந்துரையாடல்களுக்கு மத்தியில் கால்பந்தாட்டப் போட்டியொன்றை இரசித்துப் பார்த்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றது. ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளத்தின் கழகங்களுக்கிடையிலான தொடரின் இறுதிப்போட்டி ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெற்றது. பிரிட்டன் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த கழகங்கள் இப்போட்டியில் மோதியதால் அந்நாடுகளின் தலைவர்கள் இப்போட்டியில் அதிக ஆர்வம் காட்டினர்.

## திடீரென நிறுத்தப்பட்ட தண்ணீர் விநியோகம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவை சுற்றி இலட்சக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செல்வதை திடீரென்று அதிகாரிகள் துண்டித்து விட்டார்கள். இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அதிர்ச்சியும், காரணம் புரியாமல் குழப்பமும் அடைந்தனர்.

இந்தப்பகுதிக்கு விநியோகிக்கப்பட்ட குடிநீரை சோதனை செய்த போது அதில் புற்றுநோயை உண்டாக்கும் இரசாயன பொருள் கலந்திருப்பதைக்கண்டுபிடித்ததாகவும், அதன் காரணமாகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், விரைவில் சுத்திகரிப்பு செய்த குடிதண்ணீர் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்

உலகச் செய்திகள்

## உலகப் பொருளாதார வளர்ச்சி எங்களது இலட்சியம் ஜி-8 தலைவர்கள்



உலகப் பொருளாதார வளர்ச்சி,அதிகவேலைவாய்ப்பு ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்டு உழைப்போம் என்று கேம்ப் டேவிட் என்ற இடத்தில் 2 நாட்கள் நடந்த ஜி-8 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

உலகப் பொருளாதார நிலைமையில் ஸ்திர நிலையைப் பராமரிக்கவும், அரசுகளின் வீண் செலவுகளைக் குறைக்கவும் கடன் சுமையில் ஆழ்ந்துவிட்ட கிரேக்க நாட்டின் துயர்களைத் துடைக்கவும் அனைத்து முயற்சிகளையும் விரைந்து எடுப்போம் என்றும் அவர்கள் கூட்டறிக்கையில் தெரிவித்தனர்.

அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா, ரஷியா ஆகிய 8 நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இதில் முக்கிய உரையாற்றினார்.

அவர் கூறுகையில், அரசின் செலவுகளைவிட வருவாய் பெருக வேண்டும் புதிய வேலை வாய்ப்புகளை ஆயிரக்கணக்கில் பெருக்க வேண்டும். தொழில துறையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். அரசுகளின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச்செய்யும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனப்பட்டுள்ள ஐரோப்பியப் பொருளாதாரத்தை ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்செலா மார்கெல் கூறுவதைப் போல சிக்கன நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே மீட்டுவிட முடியாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. எரிபொருள் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், ஈரானில் நிலவும் அரசியல் சூழல், ஆப்கானிஸ்தானிலும் வட கொரியாவிலும் காணப்படும் நிலவரம் ஆகியவை குறித்தும் தலைவர்கள் விவாதித்தனர்.

ஈரானுக்கு எதிராக கடுமையாக பொருளாதாரத் தடை விதித்ததால் கச்சா பெட்ரோலிய எண்ணெய் சப்ளையில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுகட்ட கையிருப்பில் உள்ள எண்ணெயை சந்தைக்கு விற்பது குறித்தும் இத் தலைவர்கள் விவாதித்தனர்.

## தடுத்துவைக்கப்பட்ட மீனவர்கள் விடுதலை

வட கொரியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 29 சீன மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மஞ்சள் கடற்பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்ட சீன மீனவர்களின் மூன்று படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதை பியோயொங்கிலுள்ள சீன தூதரகத்திற்கு வட கொரிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதாக குறிபபிடப்பட்டுள்ளது.




வட கொரிய - சீன கடல் எல்லையில் வைத்து இந்த மீனவர்கள் கடந்த எட்டாம் திகதி கைது செயயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் சிறந்த உடல் நலத்துடன் உள்ளதாக பியோயொங்கிலுள்ள சீன தூதரகத்தின் கொன் சூலர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆப்கான் பற்றி ஒபாமா எச்சரிக்கை

ஆப்கானிஸ்தான் கடினமான நாட்களை எதிர்கொள்ள நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார். சிக்காக்கோவில் நடைபெறும் நேட்டோ அமைப்பின் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள வெளிநாட்டு படையினர்களின் வெளியேற்றம் இந்த மாநாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிகளை நிறைவுசெய்ய ஒற்றுமையுடன் உறுதியாக இருக்க வேண்டுமெனவும் பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளதாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.



இதனிடையே இந்த ஆண்டுக்குள் ஆப்கானிலுள்ள தமது நாட்டு படையினரை வெளியேற்றவுள்ளதாக பிரான்ஸ்சின் புதிய ஜனாதிபதி பிரன்சுவா ஓலண்ட் தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டுக்குள் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை அந்த நாட்டுப் படையினரிடம் கையளிக்க நேட்டோ அமைப்பு தயாராகி வருகின்றது. தமது நாட்டின் பொறுப்புக்கள் குறித்து முழுமையாக அறிந்து வைத்துள்ளதாக இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமிட் கர்சாய் கூறியுள்ளார். ஆப்கான் தலிபான்களுக்கு எதிராக பேராடுவதற்கு ஆப்கான் படையினருக்கு உதவி வழங்குவதாக நேட்டோ அமைப்பின் சில உறுப்பு நாடுகள் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூமியை எதிர்நோக்கி வரும் இராட்சத எரிகல்

ஸ்பெயினில் உள்ள லாசக்ரா வானிலை மைய விண்வெளி நிபுணர்கள் ஒரு எரிகல்லை கண்டுபிடித்து அதற்கு 'டி.ஏ.14' என பெயரிட்டுள்ளனர்.

1 இலட்சத்து 40 ஆயிரம் தொன் எடை கொண்ட இந்த எரிகல் (2013) பெப்ரவரியில் பூமியை நெருங்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பூமியை நெருங்கும் போ்து பல பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக பூமியை சுற்றி வரும் செயற்கை கோள்களில் மோதி அவை அழியும் வாய்ப்பு உள்ளது என்றும் அல்லது அவற்றின் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படலாம் எனவும் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து 'நாசா' விண்வெளி மையம் தெரிவித்துள்ளதாவது, 'டி.ஏ.14' எரிகல் பூமியை தாக்கும் போது 0.031 சதவீதம் மட்டுமே பாதிப்பு ஏற்படும். இதற்குமுன்பு, கடந்த 1908-ஆம் ஆண்டு இதுபோன்று இராட்சத எரிகல் சைபீரியா காட்டில் விழுந்தபோது பல நூறு சதுர மைல்கள் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அரிய கிரகணம் கடந்து சென்றது

விண்ணில் நேற்று அதிகாலை கடந்து சென்ற அரிய கிரகண நெருப்பு வளையத்தை இலட்சக்கணக்கான மக்கள் கண்டனர்.

இந்த மோதிர நெருப்பு வளையம் சந்திரனைக் கடந்த போது தங்க மோதிரம் சுற்றியது போல உடனடியாக தெரிந்து மறைந்தது.

அது பசிபிக் மற்றும் மேற்கு ஐக்கிய நாடுகளை நோக்கி நகன்றது: ஜப்பானில் அரிய கிரகணத்தைக் காண பள்ளிகள் மற்றும்



சுற்றுலா பூங்காக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது போல சீனா மற்றும் தைவானிலும் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. டோக்கியோவில் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

17-05-2012 முதல் 28-05-2013 வரை

## மகரம்



உத்ராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2 பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: போ, ஜ, ஜீ, ஜி, ஜே, ஜோ, கா, க, கி உள்ளவர்களுக்கும்)

நண்பர்கள் வட்டத்தில் ஒரு தனி முத்திரையைப் பதித்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!

மனவலிமை அதிகம் பெற்றவர்கள் நீங்கள். சினம் உங்களுக்கு உடன் பிறப்பாக இருந்தாலும், குணத்தால் சிறந்தவர்கள் என்று புகழப்படுவீர்கள். மற்றவர்கள் சொல்வதை மறுப்பு சொல்லாமல் நீங்கள் கேட்டுக் கொள்வதால், பலரும் தங்கள் குடும்ப தகவல்களை உங்களிடம் சொல்லி வைப்பார்கள்.

வாழ்வின் முற்பகுதியில் ஓரளவு பொருளாதாரநிலை இருந்தாலும், பிற்பகுதியில் மிதமிஞ்சிய பொருளாதாரத்தோடு வாழ்க்கை நடத்துவீர்கள். உடன்பிறப்புகள் மீது உங்களுக்கு பாசம் அதிகமாகவே இருக்கும்.

கடமைக்கு முக்கியத்துவம் கொடுககும் உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி ஆவல்களை பூர்த்தி செய்யும் விதத்தில் 5ஆம் இடத்தில் உலா வருகிறது. குருவின் 9ஆம் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, பொன், பொருள் சேர்க்கையும், பொலிவான வாழ்க்கையும், அன்பு நண்பர்களின் ஆதரவும், அனுதினமும் கிடைக்கப் போகிறது.

உழைப்பிற்கேற்ற பலன் ஒருவருக்கு கிடைக்க வேண்டுமானால் குருவின் பார்வை பலம் தேவை. அந்த குரு உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். அதன் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களை சேருகிறது. எனவே அந்த இடங்களும் புனிதமடைகின்றன.

### குருப் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு இதுவரை 4ஆம இடத்தில் சஞ்சரித்து வந்த அர்த்தாஷ்டம குருவாக விளங்கிய குருபகவான், இப்போது 17-5-2012 முதல் 5ஆம இடத்தில் சஞ்சரித்து உங்களுக்கு அற்புத வாழ்வை அமைத்து கொடுக்கப் போகிறது. உன்னதமான குருவின் ஆதிக்கம் உங்கள் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டுமானால் நல்ல இடங்களில் சஞ்சரிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் பஞ்சம ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால், நெஞ்சம் மகிழும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க, வரும் முன்னதாகவே அதனை (குருவை) வழிபாடு செய்ய வேண்டும். அவிட்ட நட்சத்திரமும், ஞாயிறுக்கிழமையும் இணையும் நாளில் குரு பிரீதி செய்வதன் மூலம், நல்ல வாய்புகள் இல்லம் தேடி வரும். மங்கல நிகழ்ச்சிகளும் மனையில் நடைபெறும்.

### ஐந்தாம் இடத்தில் அடியெடுத்து வைக்கும் குரு!

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் இப்போது 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 5ஆம், 9ஆம் மிஞ்சும் பலன தரும் என்பது பழமொழி. அதன்படி அதன் பார்வை பதியும் இடங்களான ஜென்மம் மற்றும் ஒன்பது, பதினொன்று ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

எனவே, நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் மாறும். உடல் நலத்திற்காக செலவிட்ட தொகை இனி குறையும். கருத்து வேறு பாடுகள் அகலும். கனிவோடு பேசி காரியங்களை சாத்தித்துக் கொள்ள வாய்ப்பு வாயிற்கதவைத் தட்டும்.

இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். புதிய பாதை புலப்படும். சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். மனக்கவலை மாற, மதிப்பும், மரியாதையும் அதிகரிக்க, இனத்தார் பகை அகல, இல்லம் தேடி இனிய செய்தி வர, மனதால் குருவை நினைத்து வழிபட்டு வந்தால், யோகங்கள் படிப்படியாக வந்துசேரும்.

5ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் போது தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். சொந்த பந்தங்களின் ஒத்துழைப்போடு வந்த பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வீர்கள். கூட்டு முயற்சிகளில் இதுவரை இருந்த ஏமாற்றங்கள் இனி அகலும்.

உங்கள் இராசிக்கு விரயாதிபதியாகவும் குரு விளங்குவதால் உடல் ஆரோக்கியம் சம்பந்தமாகவும், உடன் பிறப்புகள் சம்பந்தமாகவும் திடீர் திடீரென விரயங்களை கொடுக்கலாம். குரு கேதுவோடு சேர்வதால் எந்த நோய்யும் வந்த உடனேயே மருத்துவ ஆலோசனை செய்து கொள்வது நல்லது. அஷ்டமத்தில் செவ்வாய் மற்றும் சனி சஞ்சரிக்கும் காலங்களில் குரு பிரீத்தியோடு, உரிய வழிபாடுகளை செய்தால தங்கு தடைகள் அகலும். தனலாபம் வந்து சேரும்.

தொழில் முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். வாழ்க்கைத் துணை அமைய எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிட்டும்.

### குருவின் பார்வை பலன்கள்!

குருவின் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. தேவ குரு பார்த்துவிட்டால் தேடி வரும் செல்வம் என்று முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர். எனவே, குடும்பத்தில் குதூகலம் கூடும்.

9ஆம் இடத்தை குரு பார்ப்பதால் தந்தை வழியில் அனுகூலம் கிடைக்கும். பெற்றோர்கள் தாமாகவே முன் வந்து உதவி செய்வார்கள். பாயில் படுத்திருந்த தந்தை இனி பம்பரமாக பணியாற்றத் தொடங்கப் போகிறார். வாயில் தேடி நல்ல தகவல்கள் வந்து சேரப்போகிறது. பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள்விலகும்.

இலாப ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் சேமிப்புகள் உயரும். தொழிலுக்கு இதுவரை இருந்த பணப்பற்றாக்குறை அகன்று, மித மிஞ்சிய பொருளாதாரம் உருவாகப் போகிறது. தேவைப்பட்ட பணத்தை தேவைபட்ட நேரத்தில் நண்பர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள். பிறர் போற்றும் வகையில் வாழ்க்கைத் துணை அமையும். இளைய சகோதரத்தால் இலாபம் கிடைகக்கும்.



### வாட்டத்தை போக்குமா வுக்ர குரு

ரிஷப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 6-2-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்த வரை 3, 12இற்கு குருபகவான் வக்ரம் பெறுவது, ஒரு வழிக்கு நன்மைதான் என்றாலும், சகாய ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் வளர்ச்சியும், தளர்ச்சியும், மாறி மாறி வரும். வளர்ச்சி வரும் பொழுது அதை ஏற்றுக் கொள்ளுங்கள். தளர்ச்சி வரும் பொழுது வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். உடன் பிறப்புகள் உங்களுக்கு எதிராகச் செயல்படுவர். வழக்குகள் நீடிக்கும்.

நீண்டதூரத்தில் இருந்து வரும் தொலைபேசி தகவல்கள் நிம்மதியை குறைக்கலாம். நிச்சயிக்கப் பெற்ற சில செயல்களை மாற்றி அமைப்பீர்கள். குடும்பத்தினர்களை அனுசரித்து, கொள்கை பிடிப்பையும் சிறிது தளர்த்திக்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம்.

### மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குருப்பெயர்ச்சியால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். பொருளாதார நிலை உயரும். கல்யாண வாய்ப்புகள் கை கூடி வரும். வளர்ச்சிக்கு வித்திட மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சொல பேச்சு கேட்காத பிள்ளைகள் உங்களது குணமறித்து நடந்து கொள்வார்கள். குரு கேதுவுடன் கூடி சஞ்சரிப்பதால், ராகு, கேது ப்ரீத்தியும், யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவதும் நல்லது.

(தொடரும்)

# வெற்றிக்கு முன் வரும் தடைகள்!

ஆன்மாவிற்கான சிக்கன் சூப் கதைகள் (Chicken Soup for the Soul) பற்றி பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். தன்னம்பிக்கை, அன்பு, அறிவு, வாழ்வியல் ஆகியவற்றை விளக்கும் உண்மைக்கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பு அவை. அந்தத் தலைப்பில் 200 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. பதினொரு கோடிக்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன. நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கின்றன.


இந்த அளவு வெற்றியடைந்த அந்த நூல்களில் முதல் நூலைப் பதிப்பிக்க அதன் தொகுப்பாளர்கள் ஜாக் கேன்.பீல்ட் (Jack Canfield) மற்றும் மார்க் விக்டர் ஹான்சென் (Mark Victor Hansen) இருவரும் சந்தித்த தடைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

அவர்கள் இருவரும் தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம் குறித்த முகாம்களை நடத்தி வந்த போது அதற்குத் தேவையான நிஜக்கதைகள் நிறைய சேகரித்து வைத்திருந்தார்கள். அந்த முகாம்களில கலந்து கொண்ட பலர் அந்த நிஜக் கதைகளைப் புத்தகமாகப் போடடால் பலருக்கு உதவியாக இருக்கும் என்று சொல்ல, அதைப் புத்தகமாகப் போடும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது.

1991ஆம் ஆண்டு இறுதியில் ஒரு புத்தகமாகத் தொகுத்து நியூயோர்க் சென்று பதிப்பகங்களை ஒரு முகவரின் துணையுடன் அணுகினார்கள். சிலர் அது போன்ற தொகுப்பு நூல் விலை போகாது என்றார்கள், சிலர் அந்தப் பெயரே சரியில்லை, படிக்கவும் ஆளிருக்காது என்றார்கள், சிலர் பரபரப்பு இல்லாத கதைகள் விற்பனையாகாது என்றார்கள்.

நேரடியாக சந்திக்க முடியாத பதிப்பகங்களுக்கு அந்தப் புத்தகங்களை தபால் மூலமாக அனுப்பிப் பார்த்தார்கள். அந்தப் பதிப்பகங்களும் அவற்றைப் பிரசுரிக்க ஆர்வம் காட்டவில்லை. இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்று அவர்களது முகவரும் கைவிரித்து விட்டார்.

விற்பனை ஆகாது, விலை போகாது




என்று திரும்பத் திரும்பக் கேட்க நேர்ந்த ஜாக்கும், மார்க்கும் அந்த அபிப்பிராயங்கள் உண்மையல்ல என்று புரிய வைக்க வேறு வழி கண்டு பிடித்தனர். அந்த நூல் வெளியானால் கண்டிப்பாக பிரதிகள் வாங்குவேன் என்ற உறுதிமொழிக் கடிதம் ஒன்றை அச்சிட்டு அதில் பெயர், விலாசம் எல்லாம் எழுத இடம் விட்டு தங்கள் முகாம்களுக்கு வந்தவர்கள் ஒவ்வொருவரிடமும் கொடுத்தனர்.

20000 புத்தகங்கள் வாங்க உறுதி மொழிக் கடிதங்கள் சேகரித்த பின் கலிபோர்னியாவில் நடந்த புத்தக விற்பனையாளர்கள் பேரவைக் கூட்டம் ஒன்றிற்குச் சென்று ஒவ்வொரு பதிப்பகத்திடமும் அந்த உறுதிமொழிக் கடிதங்களைக் காட்டிக் கூடப் பேசிப் பார்த்தார்கள். அங்கேயும் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது.

130 மறுப்புகளுக்குப் பிறகு ஒரு சின்ன பதிப்பகம் அவர்கள் புத்தகத்தைப் பிரசுரிக்க முன் வந்தது. புத்தகங்கள் வெளி வந்தவுடன் முதலில் அந்த உறுதிமொழிக் கடிதம் கொடுத்தவர்களுக்கு நூல்களை அனுப்பி அவர்கள் காசோலைக்காகக் காத்திருந்தார்கள். கிட்டத்தட்ட அனைவருமே உறுதியளித்த எண்ணிக்கை புத்தகங்களை வாங்கினார்கள்.

படித்த ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சிபாரிசு செய்ய விற்பனை சூடுபிடிக்க ஆரம்பித்தது. முதல் புத்தகம் எண்பது இலட்சம் பிரதிகள் விற்பனையாகி பெரும் சாதனை படைக்க அவர்களது மற்ற தொகுப்பு நூல்களும் பிரசுரமாகி பெரும் வெற்றியைக் கண்டன.

எந்த ஒரு வெற்றியும் தடைகள் இல்லாமல் சந்திக்கப்படுவதில்லை. அதிலும் வெற்றி மகத்தானதாக இருககும் பட்சத்தில் அது சந்திக்கும் தடைகளும்- பெரிய அளவிலேயே தான் இருக்கின்றன. தடைகள் ஒன்றிரண்டிலேயே மனம் உடைந்து நிறுத்தப்பட்ட முயற்சிகள் உலகில் கோடிக் கணக்கில் இருக்கக்கூடும். அவற்றில் எத்தனையோ இன்று வெற்றி கண்டவற்றை விட எத்தனையோ விதங்களில் மேன்மையாக இருந்திருக்கவும் கூடும். அதனால் எத்தனையோ பெரும திறமைகள் உலகத்தின் பார்வைக்கே வராமல் போய் இருந்திருக்கின்றன என்பது தான் மிகவும் வருந்தத்தக்க உண்மை.

புத்தக வெற்றி மட்டுமல்ல, ஒரு ரஜனிகாந்த் ஆகட்டும், மைக்கேல் ஜாகசன் ஆகட்டும், ஐன்ஸ்டீன் ஆகட்டும் இது போல ஒவ்வொரு துறையிலும் சிகரம் எட்டிய எவரே ஆகட்டும் இது போல பல தடைகள் கடந்து மட்டுமே அடையாளம் காணப்பட்டிருககிறார்கள்.

சிக்கன் சூப் கதைகள் வெளியிட அவர்கள் இருவரும் பட்ட ஆரம்ப சிரமங்களைப் பாருங்கள். சில நேரங்களில் அவர்கள் சந்தித்த சில மறுப்புகள் நமக்கு அவமானமாகக் கூடத் தோன்றலாம். ஆனால் தாங்கள் எடுத்துக் கொண்ட விஷயத்தின் மேல் இருந்த நம்பிக்கை அவர்களைத் தொடர்ந்து முயல வைத்திருக்கிறது. தடைகள் வரும் போது அவர்கள் தயங்கி தங்கள் முயற்சிகளை நிறுத்திக் கொண்டிருந்தால் இன்று அந்த வெற்றி சரித்திரம் விடுபட்டுப் போயிருக்கும்.

பல தடைகளைக் கடந்து கடைசியில் கிடைக்கும் வெற்றிக் கனியைப் போல் சுவையானது வேறொன்றும் இல்லை. உங்கள் திறமைகள் வெளி வருவதும், புதைந்து போவதும் வெளிப்புற நிகழ்ச்சிகளாலோ, மற்றவர்களாலோ அல்ல, அதை எதிர்கொள்ளும் உங்கள் மனநிலையால் மட்டுமே என்பதை என்றும் மறந்து விடாதீர்கள்.

# "சுகவாழ்வை நோக்கி" மருத்துவக் கண்காட்சி





பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "சுகவாழ்வை நோக்கி" என்னும் தொனிப்பொருளிலான மாபெரும் மருத்துவக் கண்காட்சி நேற்று பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் ஆரம்பமாகியது.

இக் கண்காட்சிக் கூடத்தினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இக்கண்காட்சிக் கூடத்தில் இனப்பெருக்கத் தொகுதி, நரம்புத் தொகுதி, உளமருத்துவம், சமிபாட்டுத் தொகுதி, சுவாசத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, புற்றுநோயியல், குழந்தை மருத்துவம், தொற்று நோய்கள் எனப் பல்வேறு பிரிவுகளாகக் கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, மருத்துவ சிகிச்சை முறைகள் என்பனவும் விளக்கமளிக்கப்பட்டன. இக்கண்காட்சி நிகழ்வில், பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி சிவபாலன், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரும், யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவருமாகிய ஜே.கணேசமூர்த்தி உட்பட யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, யாழ். போதனா வைத்தியசாலை மேலதிக பணிப்பாளர் மற்றும் வைத்திய அதிகாரிகள், பாட ாலை மாணவர்கள், பொதுமக்கள் என பல நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு கண்காட்சியினைப் பார்வையிட்டனர். (எஸ்)

# ரஷ்யா, கஸகஸ்தானுக்கு அமைச்சர் பீரிஸ் பயணம்

(கொழும்பு)

உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ரஷ்யா, மற்றும் கஸகஸத்தான் நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு நேற்றைய தினம் அறிவித்துள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சேஜி லவ்ரோவின் அழைப்பை ஏற்று நாளைய தினம் ரஷ்யாவிற்குச் செல்லும் அமைச்சர் பீரிஸ் அங்கு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் உட்பட பல் வேறு தரப்பினருடனும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

இதனையடுத்து இரண்டு நாள் விஜயமாக எதிர்வரும் வியாழக்கிழமை கஸகஸ்தான் செல்லும் பீரிஸ் அங்கு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பான ஆண்டு நிறைவு குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவுள்ளார்.

# சம்பள முரண்பாட்டை அகற்றுங்கள் மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்



இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற் சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணி அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட மின்சார சபை ஊழியர்கள் அரைநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வடபிராந்திய காரியாலயத்தில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தே இப்போராட்டம் நடாத்தப்பட்டது.

அத்துடன் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 45 வீதமான அளவு சம்பள அதிகரிப்பதாக அரசாங்கம் அறிவித்த போதிலும், அந்த அதிகரிப்பு அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்படவில்லை.

எனவே அனைத்து ஊழியர்களுக்கும் சம்பள உயர்வை வழங்கவேண்டும் எனவும் மேற்படி தொழிற்சங்க தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு சம்பள உயர்வைப் பெற்றுத்தர மறுக்கும் பட்சத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் வேலைநிறுத்தப் பேராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.(எஸ்)

# சர்வதேசத்தை நம்பவைக்க திரிபுபடுத்திய புள்ளிவிபரங்கள்

## அமைச்சர் பீரிஸ் மீது குற்றச்சாட்டு

வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனுடன் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த புள்ளிவிபரங்கள் உண்மையல்ல என கருத்துக்கள் வெளியாகியுள்ளதாக பி.பி.சி தமிழோசை தெரிவித்துள்ளது

இலங்கையின் ஏனைய பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 8 சதவீதமாக இருக்கும் போது, போருக்குப் பின்னரான காலகட்டத்தில் வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி 22.9 சதவீதமாக உயர்ந்துள்ளது என பீரிஸ் கூறியிருந்தார்.

இது குறித்து பி.பி.சி தமிழோசைக்கு கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் பொருளியல் ஆய்வாளரான கலாநிதி முத்துக் கிருஸ்ண சர்வானந்தா, சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் புள்ளிவிபரங்களை திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டு வடமாகாணத்தின் பொருளாதாரம் வளர்ச்சியைக் கண்டுள்ள போதிலும், இதுவொரு புதிய விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

போர்நிறுத்த காலத்தில் கூட இத்தகையதொரு ஒரு சூழல் ஏற்பட்டது. ஆனால் போர்நிறுத்த காலத்தில் ஏற்பட்ட அந்த பொருளாதார வளர்ச்சி நிலைத்து நிற்கவில்லை. அதேபோன்று வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி தொடருமா என்பதும் கேள்விக்குறியே

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூறியதில் சற்றுக் கள்ளத்தனம் இருப்பதாக நான் கருதுகிறேன். அரசாங்கம் அரசியல் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பிலான தகவல்களை திரிபுபடுத்திக் கூறும் ஒரு பரப்புரை தந்திரோபாயமாகத்தான் பீரிஸின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொருளாதார வளர்ச்சி தான் முக்கியம் என அரசாங்கம் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக சர்வதேச சமூகத்திடம் இருந்து உதவிகளை வெளிப் படையாக அரசாங்கம் கேட்டுவருகிறது

இத்தகையதொரு பின்னணியிலேயே திரிபுபடுத்தப்பட்ட புள்ளிவிபரங்களை வெளியிட்டு சர்வதேச சமூகத்தை தவறான வழியில் நம்ப வைக்கும் ஒரு நடைமுறையாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது என அவர் பி.பி.சி. தமிழோசையிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

### மாணவனைக்...

வில்லை என நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் மாணவனின் பெற்றோர் எங்கு தேடியும் காணாததையடுத்து வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இம்மாணவன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(12)

### தமிழகத்தின்...

எனவும் அவர் கூறினார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி உட்பட பல தமிழ்த் தலைவர்களினால் ஈழம் கோரிக்கை மீளவும் முன்வைக்கப்படுவது குறித்து தெரிவித்த அவர் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களின் ஆக்ரோஷமான நிலைப்பாடானது இலங்கைத் தமிழர்கள் மீதான எந்தவித நலன்களின் அடிப்படையானதாக இருக்க முடியாது. இலங்கை அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் தேவையற்ற சந்தேகங்களை இது உருவாக்குமெனவும் அவர். மேலும் தெரிவித்துள்ளார்.

### 10 வருடம்...

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சரத் பொன்சேகா எனக்காக மக்கள் சிந்திய கண்ணீரை நான் ஒருபோதும் மறந்துவிடமாட்டேன். எனக்கு நேர்ந்த அசாதாரணத்துக்காக மக்கள் பட்ட வேதனையையும் மறந்துவிட மாட்டேன். இன்று முதல் மக்களுக்கான எனது பணி மீண்டும் தொடரப்போகிறது. எமது மக்களுக்காக என்னை நான் தியாகம் செய்வேன்.

மக்கள் எனக்கு பாரியதொரு சக்தியினை வழங்கியுள்ளார்கள். அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட எனக்கு நியாயம் கிடைக்க எனது மக்கள் என்னோடு தொடர்ந்தும் இருக்கவேண்டும்.

வாழ்நாள் முழுவதும் உங்களுக்காக நான் இருப்பேன். படையினர் இந்த நாட்டுக்கு பெற்றுக் கொடுத்த வெற்றியினை தொடர்ந்தும் பாதுகாப்பேன். மக்கள் மத்தியில் சந்தோஷமும், சமாதானமும் நிலைத்து நாட்டில் ஜனநாயகமான ஆட்சியை கொண்டுசெல்ல நாம் அனைவரும் இணைந்து பாடுபடுவோம்.

நான் மீண்டும் இந்த நாட்டுக்காக என்னைத் தியாகம் செய்வேன். என் உயிரைக் கொடுத்தேனும எம் மக்கள் சந்தோஷமாக வாழ வழிசமைப்பேன். உங்கள் அனைவருக்கும் வெற்றி உண்டாகட்டும்!

முன்னதாக சரத் பொன்சேகா வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்துநேற்று மாலை சுமார் 4.50 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார். 27 மாதகாலம் சிறைவாசம் அனுபவித்த அவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்துள்ளதை அடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நவலோகா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சரத் பொன்சேகா நேற்றுக்காலை அங்கிருந்து விடுவிக்கப்பட்ட தையடுத்து, உயர்நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவர், தாம் சமர்ப்பித் திருந்த இரண்டு மேல்முறையீட்டு மனுக்களையும் விலக்கிக் கொள்ளும் மனுவை சமர்ப்பித்தார்.

அதனை நீதியரசர்கள் ஏற்றுக்கொள்வதாக நேற்று பிற்பகல் அறிவித்தனர். இதையடுத்து மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு அங்கு முறைப்படியான விடுதலை அளிக்கப்பட்டது. பிற்பகல் 4.50 மணியளவில் சரத் பொன்சேகா சிறையில் இருந்து வெளியேறினார். அவரை. பெருமளவு ஆதரவாளர்கள் கூடி நின்று வரவேற்றனர்

### ஆணைக்குழுவின்...

இதன் அடிப்படையில் ஜாதிகஹெல உறுமய கட்சி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றிய தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தமிழ்த் தேசி யத்திற்கு ஆதரவான பரிந்துரைகளை முன்வைத்துள்ள தாகவும், பெரும்பான்மை சிங்கள மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்துள்ளதாகவும் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட 1 இலட்சத்து 50 ஆயிரம் சிங்கள இடம்பெயர் மக்கள் தொடர்பில் ஆணைக்குழு கவனம் செலுத்தவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மனித உரிமை மீறல் விசாரணை, கருணா மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு எதிரான விசாரணை, சிங்களப் பகுதிகளில் தமிழ் அதிகாரிகள் நியமனம் உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக யுத்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வெளிநாடுகளில் வாழும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக ஆணைக்குழு எவ்வித பரிந்துரைகளையும் முன்வைக்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# தேசிய அருங்கலைகள் பேரவையின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய அருங்கலைகள் பேரவையினது முதலாம் காலாண்டுக்கான செயற்திட்டங்கள் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டம் அமைசசர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது நாடளாவிய ரீதியில் தேசிய அருங்கலைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் அடைவு மட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதான பயிற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக் கொள்வதனூடாக பயனாளிகளினது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அவர்கள் தேசிய அருங்கலைகள் பேரவையினால் நடத்தப்பட்ட கண்காட்சிகள் மற்றும் பயிற்சி நெறிகள் தொடர்பாகவும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், எதிர்காலங்களில் மென்மேலும் வினைத்திறனுள்ள வகையிலும் பொருளாதாரத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதனிடையே மகிந்த சிந்தனைக்கமைவாக கைத்தொழில் கிராமங்களைக் கட்டியெழுப்புவது, இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கைப்பணி நிலையங்களை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

# மலசல கூடத்தில் மருந்துக் களஞ்சியம்

(கொழும்பு)

அழகு சாதன மற்றும் ஔடத அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது விநியோகத்திற்கான பல வகையான மருந்துகளை மலசலகூடம் ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டி நகரத்தில் உள்ள பல்வேறு மருந்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெரும்பான்மையான மருந்தகங்கள் உணவு மற்றும் ஔடத சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படவில்லை என்பது தெரிய வந்துள்ளதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இப்படியான மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மேன்முறையீடு செய்த ஆசிரியர்கள் இடமாற்றம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருட இறுதியில் வருடாந்த இடமாற்றம் தருமாறு மேன்முறையீடு செய்த ஆசிரியர்களுக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆசிரியர்கள் தமக்கு தமது பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பதிலீட்டு ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அந்தந்தத் துறைகளில் நியமிக்கப்பட்ட பின்னர் மேன்முறையீடு செய்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்படுமெனவும், அதற்கான கால எல்லை குறித்து தாம் ஆசிரியர்களை நியமித்த பின்னர் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (எஸ்)

# விவசாய சம்மேளன தலைவரின் வீட்டிற்கு தீ வைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)



மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் தலைவரும் மறவன்புலோ கிராமத்தின் பொது அமைப்புக்கள் பலவற்றில் அங்கம் வகிப்பவருமான சி.திருஞானசம்பந்தரின் வீட்டினை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் இரவு சுமார் 9.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இத்தீவைப்புச் சம்பவத்தினால் வீட்டிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத போதும் அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வைக்கோல் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. சம்பவத்தினை அறிந்து விரைந்து வந்த இராணுவத்தினர் தமது பவுசர் வாகனத்தினை பயன்படுத்தி நீர் ஊற்றி தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். சுமார் 4 மணி நேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

# பொன்சேகாவின் விடுதலை அதிருப்தியடையும் ஜே.வி.பி.



(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விடுதலை முழுமையாக இருந்தால் இரத்து செய்யப்பட்ட அவரது ஓய்வூதியக் கொடுப்பனவும் அரசியலில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கான சுதந்திரமும் இழக்கப்பட்ட இராணுவ அந்தஸ்துகளும் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலர் விஜித்த ஹேரத் பி.பி.சி தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

அப்படியான முழுமையான விடுதலை சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருக்காத பட்சத்தில் சரத் பொன்சேகாவின் விடுதலையால் அர்த்தமில்லை.

பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதியுடன் ஜனநாயக தேசிய முன்னணி (டி.என்.ஏ) நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலெஸூம் அனோமா பொன்சேகாவும் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் மக்கள் விடுதலை முன்னணி எந்த விதத்திலும் பங்கெடுக்கவில்லை என்றும் விஜித்த ஹேரத் சுட்டிக் காட்டினார்.

எதிர்காலத்தில் தாம் தொடர்ந்தும் சரத் பொன்சேகாவின் அரசியல் நடவடிக்கைகளோடு இணைந்து செயற்படுவதா இல்லையா என்பது அவரது அரசியல் நிலைப்பாடுகளை பொறுத்தே அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கல்வியியலாளர் சமூகத்தை மதிக்கவில்லை அரசாங்கம்

## பல்கலை ஆசிரியர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்வியியலாளர் சமூகத்தை அரசாங்கம் மதிக்கவில்லை எனவும் பாடசாலை முதலாம் வகுப்புக்குக்கு மாணவர்களை சேர்ப்பதில் தமக்கு சிறப்புரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றவில்லை எனவும் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் மன்னிப்புக் கோரப்படவில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியது.

முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பதில் சிறப்புரிமை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துரையாடினர். எனினும் விரிவுரையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமைச்சின் செயலாளர் கோரியதாகவும் விரிவுரையாளர்கள் துரத்தப்பட்டதாகவும் மேற்படி சங்கத்தின் பேச்சாளர் மகிம் மெண்டிஸ் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படக்கூடாது என சிலர் கூறுகின்றனர். ஆனால், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களைப் போன்று, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு மருத்துவ திட்டம், போக்குவரத்துப் படி அல்லது குறைந்த வட்டியிலான வீட்டுக்கடன் என்பன வழங்கப்படுவதில்லை. பி.எச்.டி பட்டம் கொண்ட முதலாம் தர சிரேஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு அடிப்படைச் சம்பளமாக 48 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இது போதுமானதல்ல என அவர் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி மிக முக்கியமானதாகும். கல்வியியலாளர் சமூகத்திற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்காவிட்டால் நாட்டை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனவும் மகிம் மெண்டிஸ் கூறினார்.

# மெனிக்பாம் நலன்புரி மக்களை துரிதமாக மீள்குடியமர்த்த ஏற்பாடு

(வவுனியா)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களை துரிதமாக மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் வவுனியா மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் பொறியியல் பிரிவு, இதுவரை இப்பிரதேசத்தில், குறிப்பிடத்தக்க அளவு கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதுடன் இப்பணிகள் முழுமையாக பூர்த்தியானவுடன், இந்நலன்புரி கிராம மக்களை தமது சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு, அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது.

யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த 3 இலட்சத்திற்கும் அதிகமானோர், நலன்புரி கிராமங்களில் தங்க வைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் பெரும்பாலானோர், அரசாங்கத்தினால் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டவுடன், தங்களது சொந்த இடங்களுக்கு செல்லும் எதிர்பார்ப்புடன் இருப்பதாக, இந்நலன்புரி கிராமத்தில் தங்கியுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்நலன்புரி நிலையத்தில் 6 ஆயிரம் பேரே தங்கியுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதும் கண்ணிவெடிகள் முற்று முழுதாக அகற்றப்படாமையினால், மீள்குடியேற்ற பணிகள் தாமதமடைந்ததாக அரச தரப்பில் குறிப்பிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச சக்திகள் ஊடுருவ இரட்டை நிலையே காரணம்

## அரசை சாடுகிறார் தம்பர அமிலதேரர்



(கொழும்பு)

நாட்டுக்குள் சர்வதேச் சக்திகள் ஊடுருவுவதற்குச் சர்வதேச கொள்கைகள் தொடர்பாக அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமையே காரணமென தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இன மற்றும் மதவாதம் தலைதூக்குவதற்கு அரசியல் தலைவர்களே காரணமாக அமைந்துள்ளனர்.

இதனைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளனர் என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இனவாதம் வளர்வதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் தலைவர்களே பொறுப்புக்கூற வேண்டும். எமது நாட்டு மக்களின் மொத்த மனித உரிமைகளையும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க அமைச்சரிடம் அடகு வைத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.